# அஞ்சனா புரிந்து கொண்டாள்

## 1

குளியலறையிலிருந்து வெளிப்பட்ட அஞ்சனா மேஜை மேலிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள். காலை மணி எட்டு. இதற்கு மேலும் தாமதித்தால் பாட்டி பங்கஜம் மாடிக்கே மூச்சிறைக்க, முகம் சிவக்க - கோபம் கண்களில் தெறிக்க வந்து நின்று விடுவாள்.

பீரோவிலிருந்து எடுத்து முக்காலி மீது வைத்திருந்த தனது மாற்று ஆடைகளை அவசரமாக அணிந்து கொண்டு, அலங்கார மேஜையில் பதித்திருந்த கண்ணாடி முன் வந்து உட்கார்ந்து கொண்டாள். நீண்டு இடைவரைத் தொங்கிய பட்டுப் போன்ற தன் முடியை இழுத்து முகத்தின் மீது பரவவிட்டுக் கொண்டாள். முதல் நாள் அவள் தலையில் கட்டுச் சுமையாக அவளது தோழி கமலா சூட்டிவிட்டிருந்த மல்லிகையின் மணம் இன்னமும் கூந்தலை விட்டுப் போகவில்லை.

''பெண் பார்க்க வர போறாங்க- அதுக்குள்ளே நீ ஏன் ஊர் கூட்டித் தம்பட்டம் அடிக்கணும்?'' தன் சிநேகிதிகள் சிலரை அன்று தன்னுடன் கூட இருக்கும்படி அழைக்க விருப்பம் தெரிவித்தபோது பாட்டி எடுத்த எடுப்பிலேயே தடுத்துவிட முயன்றாள்.

''கமலா என் உயிர்த்தோழி- ஒரே வகுப்பிலே ஒரே பகுதிப் பாடங்கள் எடுத்துப் படிச்சோம். அவ எனக்குத் தலை வாரிவிட்டுச்

சிங்காரிச்சுவிடக் காத்துண்டு இருக்கா பாட்டி. உங்களைத் தவிர வீட்டுப் பெண்கள் யாரும் கிடையாதே - தயவுசெய்து கமலாவை மட்டும் வந்து தங்க அனுமதியுங்கோ-'' பாட்டியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கெஞ்சி தாஜா செய்து முடிவில் உத்தரவு வாங்கியிருந்தாள்.

கமலாவின் ஆலோசனைப்படி அவள் இறந்துபோன தன் தாயின் பச்சைக்கல் நெக்லசையும் - காதணிகளையும் அணிந்து கொண்டாள். ஆழ்ந்த பச்சை வண்ணப் பனாரஸ் பட்டுச் சேலையைக் கட்டிக் கொண்டாள். இடது கையில் கடிகாரமும் - வலது கையில் கலகலத்த பச்சை வண்ணக் கண்ணாடி வளையல்களும் -கழுத்திலே லேசான பவுடரும்- பட்டும் படாத உதட்டுச் சாயமும், கண்களில் மெல்லிய மைக்கோடுகளுமாக- மாப்பிள்ளை வீட்டார்கள் முன் வந்து வணக்கங்கள் செய்தாள்.

எல்லோருக்கும் பாட்டி காப்பியும், டிபனும் கொடுத்து உபசரித்துக் கொண்டிருந்தாள்.

முரளி தன் முன் வைத்திருந்த தட்டிலிருந்து பாதாம் கேக்கை ஒரு துளி பிட்டு வாயில் போட்டுக் கொண்டான். தன் பார்வையை அவள் மீதிலிருந்து வேறு எங்கும் திருப்பவில்லை.

பெண்ணை அவர்கள் எல்லோருக்கும் பிடித்துப் போய்விட்டது என்பதைப் பின்னர் தொடர்ந்த மகிழ்ச்சி மிக்க உற்சாகமான பேச்சு வார்த்தை ஊர்ஜிதம் செய்தது.

வெள்ளை ஷர்ட்டும், பட்டுக்கரை வேஷ்டியுமாக அவன் அவர்களது வீட்டுக்குள் நுழைந்தபோதே அஞ்சனா மாடியிலிருந்த தன் அறை ஜன்னல் வழியே அவனைப் பார்த்து விட்டிருந்தாள். அவளைவிட அவன் நல்ல சிவந்த நிறமாகக் காணப்பட்டான். சுருண்ட முடியும் அரும்பு மீசையும், குறும்புப் பார்வையுமாக மிகவும் நன்றாகத்தான் இருந்தான்.



அப்பா அவனது படிப்பையும் வருங்காலத்தில் அவன் உயர்ந்த மேன்மையடைக்கூடிய சாத்தியக்கூற்றையும் எடை போட்டுத் திருப்தியடைந்து விட்டார்.

பாட்டிக்கு அவன் கை நிறையச் சம்பாதிப்பது பற்றிப் பரம சந்தோஷம். மேலும் அவர்களது குடும்பம் மிகவும் கவுரவமான பரம்பரையின் பின்னணியில் உருவானது என்றதொரு பெருமையைப் பெற்றிருந்தது.

அவளுக்கு? கண் நிறைந்த கணவன் என்ற அளவில் அவனைப் பார்த்தவுடனேயே பிடித்து விட்டது.

''என்னங்க எங்க பையன் உங்க பேத்தியோட கொஞ்சம் தனியாப் பேசணும்னு ஆசைப்படறான்.'' காஞ்சிபுரப் பட்டிலே இரட்டை நாடி உடம்பில் திணறிய சம்பந்தியம்மாள் கேட்டபோது பாட்டி பங்கஜம் கொஞ்சம் தயங்கினாள்.

''வெளியே எங்கேயும் போக வேண்டாம். அவங்க ரெண்டு பேரும் முன்னறையிலே பேசிக் கொள்ளட்டும். நாம் ஹாலுக்குள்ளே போயிடுவோம்-'' சம்பந்தியம்மாள் வழி சொன்னாள்.

பாட்டி பங்கஜம் அந்தக் காலத்து பி.ஏ. பட்டதாரி. ஆனாலும் கொள்கையளவில் சரியான பத்தாம்பசலி.

அப்பாவிடம் சென்று அடிக்குரலில் கிசுகிசுத்து உத்தரவு பெற்றுக் கொள்ளக் கொஞ்சம் தாமதம் செய்த போது - அஞ்சனாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

முரளியை அவர்களாகப் பார்த்துத் தேர்ந்து எடுத்து அவளுக்கு வருங்காலத்தில் கணவனாக்க முயன்று கொண்டிருக்கிறார்கள். அவள் அவனைக் காதலித்துவிட்டுக் கல்யாணம் செய்து வையுங்கள் என்று பாட்டி முன்வந்து நின்று நிர்ப்பந்திக்கவில்லை. ஒரு சில வார்த்தைகள் பேசி- ஒருவர் மனதை

மற்றவர் புரிந்து கொள்ள நினைப்பதில் தவறு என்ன? ... எதற்கெடுத்தாலும் இந்தப் பாட்டி... இப்படி ஒரு முட்டுக்கட்டை போட வேண்டியது அவசியமா? பற்களை அழுத்தமாக ஆத்திரத்துடன் கடித்துக் கொண்டாள்.

''ஓ! தாராளமாகப் பேசட்டும். எங்கள் வீட்டுப் பெண்ணுக்கும் சில கேள்விகள் கேட்க விருப்பம் இருக்குமில்லையா?'' அப்பா பெரிய நகைச்சுவையை அள்ளி உதிர்த்ததுபோல் ஹால் அதிரச் சிரிக்க- எல்லோரும் சிரிப்பில் மிதந்தனர்.

முரளியும் அவளும் மட்டுமேதான் முன்னறையில் இருந்தனர். கிர் என்று கத்திய மின் விசிறி எழுப்பிய ஓசையை ரசிக்கிறவர்கள் போல இருவரும் சில நிமிடங்கள் மௌனமாக இருந்தனர். தொண்டையைக் கனைத்துக் கொண்டு முரளிதான் முதலில் பேசினான்.

''பெரியவங்களுக்குப் பிடிச்சுப் போயிருக்குன்னு தோணுகிறதனாலேயும் எனக்குப் புடிச்சுப் போயிட்டதாலேயும்- நான் ஒருமையிலே பேச விரும்பறேன். ஆட்சேபணை இல்லையே?''

தரையில் விரித்திருந்த கம்பளத்தில் தெரிந்த பூக்கோலத்தை வேடிக்கை பார்த்தபடி இருந்த அஞ்சனா நிமிர்ந்து பார்த்தாள். அவளது காதுகள் சூடாகி, நெஞ்சு படபடத்தது. சரி என்று தலையை அசைத்தாள்.

''எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சுப் போச்சு- என்னைப் பொருத்தவரை வரதக்ஷணை என்கிற சங்கதி பிடிக்காத விஷயம். ஆனால் நான் வீட்டுக்கு மூத்த பிள்ளை. இரண்டு தங்கச்சிகள் கல்யாணத்துக்கு இருக்காங்க. அதனாலே அம்மா அதைப்பத்திக் கண்டிப்பா இருப்பதை நீ தப்பா நினைச்சுக்கக் கூடாது.''



''எனக்கும் வரதக்ஷணை கொடுத்துக் கல்யாணம் பண்ணிக்கிறது பிடிக்காத சங்கதிதான். ஆனால் என் அப்பா கொடுக்க ஒப்புக் கொண்டால் குறுக்கே புகுந்து நான் மறுப்புத் தெரிவிக்க முடியாது. என் பாட்டி ரொம்பக் கோவிச்சிப்பாங்க-''

''நாங்க பரம்பரையா பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவங்க. அதனாலே அம்மா கல்யாணத்தைக் கொஞ்சம் ஆடம்பரமா செய்யணும், சீர்வரிசை அதிகமா இருக்கணும்னு நிபந்தனை போடுவாங்க. என்னைப் பொருத்தவரை- இவைகளில் நான் சம்பந்தப்பட்டவன் இல்லை. பெரியவங்க பேச்சுக்கு மதிப்புக் கொடுக்கிறேன். அவ்வளவுதான். இதை நீ புரிஞ்சுக்கணும்.''

கல்லூரி நாட்களில் கருத்தரங்கில் வரதக்ஷிணையை மிகவும் சாடிப் பேசியிருக்கிறாள் அஞ்சனா. வரதக்ஷணை வாங்குகிற வனைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று வீராவேசமாகச் சபதம் செய்திருக்கிறாள். ஆனால் நடைமுறையில் அது சாத்தியப்படாத சங்கதி என்பதை அவளது கல்லூரித் தோழிகளுக்கு நடந்த கல்யாணங்கள் நிரூபித்து விட்டன. சபதம் செய்த அத்தனை பேரும் - ஆட்டுக்குட்டிகளாக அப்பா அம்மா பேச்சிற்கு அடங்கிப் போகும் ஆண்பிள்ளைகளுக்கு- வரதக்ஷணை கொடுத்துத்தான் கழுத்தை நீட்டிவிட்டு, பின்னர் வாயை மூடிக்கொண்டு சராசரிக் குடும்பத் தலைவிகளாக மாறிவிட்டனர். அவளுடன் நெருக்கமாகப் பழகிய ஆறு தோழிகளில் நான்கு பேருக்கு அந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே திருமணம் நிச்சயமாயிருந்தது. அவள் ஒருத்தி மட்டும் வரதக்ஷணை ஒழிப்புக்கு என்று தன் வாழ்க்கையைத் தியாகம் செய்து கொண்டு தனி மரமாக நின்றுவிட்டால்- அந்தப் பயங்கரப் பிரச்சினை தீர்ந்துவிடப் போகிறதா? எனவே அந்த வரனைக் குறித்து வீட்டிலே அப்பாவுக்கும் பாட்டிக்கும் இடையே சர்ச்சைகள் நடந்த போது அவள் தலையிடவில்லை. ''என்ஜினியர் பட்டம். மேற்படிப்புக்கு அவன் வேலை பார்க்கும் கம்பனியே

அமெரிக்காவுக்கு அனுப்பப் போகிறதாம். இருபதாயிரம் கையில் கேட்கிறாங்க... என்ன செய்யறது... இப்போ ரூபாயின் மதிப்பு ரொம்பக் குறைஞ்சு போய்க் கிடக்கே-'' அப்பா அலுத்துக் கொண்டார்.

''தொலையட்டும்-ஒரே பெண்- பணத்தைப் பார்த்தா முடிகிற காரியமா இது. நல்லவேளை அவ அம்மா விட்டுப்போன நகை எல்லாம் பத்திரமா இருக்கு. அவைகளைப் போட்டுச் சரிக்கட்டிடலாம்.'' பாட்டி உற்சாகமாகப் பேசினாள்.

''ஒரு கார் வாங்கித் தந்துவிடணும்னு பையனோட அப்பா ஒரு நிபந்தனை விதிச்சிருக்கார்.''

''உன் கார் வாங்கி நாலு மாசந்தானே ஆகிறது. மாப்பிள்ளை பேரில் அதை மாத்திக் கொடுத்திடு. உனக்கு ஆபீஸ் கொடுக்கிற கார் வசதி போதும்.'' பாட்டி பங்கஜம் அதற்கும் வழி வகுத்தாள்.

''எனக்கு இருக்கிறது ஒரே பெண்தான். எனக்குப் பிறகு என் சொத்து என் தாயார் பேரில் உள்ள பாங்குப் பணம் எல்லாம் அஞ்சனாவுக்குத்தான்னு எடுத்துச் சொன்னேன். அப்பக்கூட வரதக்ஷணை விஷயத்திலே அவங்க வீட்டிலே ரொம்பக் கண்டிப்பா இருக்காங்க.''

''சேது! நான் சொல்வதைக் கேளு. வயது வந்த பெண்ணை எத்தனை நாள் நம்மோட வீட்ல வச்சிக்கிட்டிருக்க முடியும்? எனக்கு வயசாயிடுச்சு. அஞ்சனா அம்மா, குழந்தையைப் பெத்துப் போட்டுட்டு மகராஸி பொக்குனு போயிட்டா. இரண்டு வயசிலிருந்து நான் அஞ்சனாவைக் கட்டிக் காத்துட்டு வரேன். இந்தக் காலத்து இளசுகளை வச்சுப் பொறுப்பா காப்பாத்திக் கரை யேத்தறது ரொம்பப் பயங்கரமான வேலை. நீயும் மரகதம் போன பிறகு மறு கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு மறுத்திட்டே. மாதத்துக்கு இரண்டு தடவையாவது கம்பெனிக் காரியமா டெல்லிக்கும் பாம்பாய்க்கும் பறந்திட்டு இருக்கே. தனியா இவளை



வச்சுக்கொண்டு வயிற்றிலே நெருப்பைக் கட்டிக் கொண்டு நான் படும்பாடு- உனக்கென்ன தெரியும்? பேசாம இந்த இடத்தை முடிக்கப்பாரு-'' பாட்டிதான்- அப்பாவை முடுக்கி விட்டாள்.

''உனக்குச் சமைக்கத் தெரியுமா?-'' முரளி கேட்டதும் அவள் திடுக்கிட்டுப் போனாள். தாயில்லாக் குழந்தையென்று அப்பா அவளுக்கு அதிக செல்லம் கொடுத்து வளர்த்திருந்தார். ''கொஞ்சம் இந்தக் கீரையை ஆய்ந்து கொடு அஞ்சனா.'' பாட்டி தப்பித் தவறி என்றாவது சமயலறையிலிருந்து அவளைக் கூப்பிட்டு விட்டால் அப்பா குறுக்கிட்டு விடுவார்.

''படிக்கிற குழந்தை-அதையேன் தொந்தரவு செய்றீங்க. சமையல் பெரிய கம்பசித்திரமோ? தானே தேவைப்படும்போது கத்துக்கொண்டு விடுவா. மேலும் நம்ம வீட்டிலே சமையலுக்கு ஆள் இருக்கும்போது குழந்தை ஏன் கஷ்டப்படணும்?-''

சினிமா - கச்சேரி - நாடகம் - சுற்றுலாப் பயணங்கள் என்று அவளது வாழ்க்கை ஓர் உல்லாச வட்டத்துக்குள்ளே சுழன்று வந்து கொண்டிருந்தது.

''சமையல் கட்டுப் பக்கமே நான் போனதில்லை.'' மெல்லச் சிரித்தாள். முரளி முகத்தைச் சுருக்கினான். ''எங்கள் வீட்டில் அம்மாதான் சமைக்கிறது வழக்கம். அவங்களுக்கு இப்போ கொஞ்சம் அசதியாக இருக்கிறதனாலே வீட்டுக்கு வந்ததும்- உன் கையில் அந்தப் பொறுப்பைத் தந்துவிடுவாங்க. அதனாலே நிச்சயதார்த்தம் ஆனவுடனேயே கொஞ்சம் சமைக்கக் கத்துக்க ஆரம்பிச்சுடு-''

''ஆமாம் உனக்கு என்ன வர்ணம் பிடிக்கும்?''

''பச்சை எனக்கு ரொம்பப் பிடிச்ச கலர்.''

''எனக்கு நீலந்தான் ரொம்பப் பிடிக்கும். ரிஸப்ஷனுக்கு நீலத்திலே நல்லதா சேலை எடுக்கும்படி என் அம்மா உன் பாட்டிக்கிட்ட சொல்லியிருக்காங்க.''

''உணவு வகையில் நீ எந்த வகை? நான் அசைவம். ஆனால் வீட்டிலே அம்மா தீவிர சைவம்.''

''நானும் பாட்டியும் தீவிர சைவம். அப்பா பார்ட்டிக்குப் போக வேண்டியிருப்பதால்- மாமிசம் சாப்பிடப் பழகிட்டிருக்கார்.''

''நான் சிகரெட் பிடிக்கிற பழக்கம் உண்டு. எப்போதாவது கம்பெனி பார்ட்டிகளில் மது சாப்பிடற பழக்கமும் உண்டு. உனக்கு ஆஷேபணை உண்டா?''

அவள் எப்படி மறுப்புச் சொல்ல முடியும்? அவள் தந்தை தன் மனைவியை இழந்த சோகத்தை மறக்க முயலுவதாகச் சொல்லி- மெல்ல- அந்தப் பழக்கத்திற்குத் தாவி விட்டவர்தானே?

காலை வேளையில் மட்டும்...அவர் ஸ்நானம் செய்துவிட்டுப் பட்டையாக விபூதி அணிந்து ருத்திராஷ மாலையுடன் சிவப்பழமாகக் காட்சியளிப்பார். எட்டு மணி அளவில் பூஜை அறைக்குள் நுழைந்தால், ''பால் நினைந்தூட்டும் தாயின் சாலப்பரிந்து நீ பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி -'' என்று திருவாசகத்தை உரக்கக் கத்தியபடி பூஜையில் அமர்ந்திருப்பார். வீடு முழுவதும் அவர் கத்தையாக அறைக்குள்ளே ஏத்தி விட்டிருக்கும் ஊதுபத்தி, புகை மண்டலமாக வளைந்து கொண்டிருக்கும்.

ஆனால் சிறிது பொழுதில் காப்பி, பலகாரத்துக்குப் பின் தாம் வேலை பார்த்த அம்பத்தூர் தொழிற்பேட்டையிலிருந்த சுவிதா என்ஜினியரிங் ஒர்க்ஸுக்குக் கிளம்பும் போது கோட்டும் ஸுட்டுமாக, கால் பூட்ஸில் தெரியும் பளபளப்புடன், எத்தனை ஒரு வித்தியாசமான மனிதராகப் புறப்படுவார்? சில நாட்கள் அவர் வீடு திரும்புவதற்கு மிகவும் நேரமாகவிடும். வரும்போதே ஒரு தள்ளாட்டமாகக் காணப்படுவார். அவர் பேச வாயைத் திறக்கும் முன் பாட்டி பங்கஜம் முந்திக்கொள்வாள்.



''சேது! நேரே மாடிக்குப்போய்ப் படு- படிச்சுக் கொண்டிருக்கிற குழந்தைகிட்டே இப்போ நீ பேச வேண்டிய அவசியமில்லை.'' கண்டிப்பான குரலில் அதட்டி அனுப்பி விடுவாள். அப்பாவுக்கு இந்த வயசிலும் அம்மாவிடம் பயம்.

''நான் மறுப்புத் தெரிவித்தா உடனே நீங்க உங்கப்பழக்க வழக்கங்களை நிறுத்திக் கொண்டு விடப்போறீங்களா?'' அஞ்சுனா மெல்லக் கேட்டாள்.

''பெரிய நிறுவனங்களில் உயர் மட்டத்து அதிகாரியாக வேலை பார்க்க நேர்ந்துட்டா அங்கே நடக்கும் பார்ட்டிகளுக்குப் போகாம இருக்க முடியாது. ஆனால் நான் எல்லாத்திலும் ஒரு அளவோடு நடந்துப்பேன். கவலைப்படாதே.''

அவள் கவலைப்படவில்லை. வாழ்க்கையில் அவள் எதையுமே தீவிரமாக எடுத்துக்கொண்டு சிந்தித்துக் கவலைப் பட்டதில்லை.

''அஞ்சனா! அஞ்சனா?'' பாட்டி பங்கஜத்தின் கம்பீரமான குரல் மாடிப்படியின் கீழிருந்து உரத்துக் கேட்டது.

வேகமாகத் தலைமுடியைச் சுற்றிக் கொண்டை போட்டுக் கொண்டே, நெற்றிப் பொட்டை விரலால் சரி செய்து விட்டு, அவசரமாகப் பஞ்சினால் பவுடரை மூக்கின் மீதும், கண்மையை நெற்றியிலும் அப்பிக்கொண்டு ''இதோ வட்துவிட்டேன்'' குரல் கொடுத்தபடி தன் உருவத்தைக் கண்ணாடியில் மீண்டும் ஆராய்ந்துவிட்டு இறங்கி ஓடிவந்தாள்-அப்பா பூஜையை முடித்துவிட்டுக் காப்பி பலகாரத்திற்குத் தயாராகச் சாப்பாட்டறை மேஜையில் அமர்ந்திருந்தார்.

''இனிமேலே சீக்கிரம் எழுந்திருக்கப் பழகிக்கோ. நான் எது சொன்னாலும் உனக்குப் புரிகிறது கிடையாது. ரொம்ப அழுத்திச் சொன்னா தலைமுறை இடைவெளி - அதிகம் புரியாம நான்

உளறுகிறதாகச் சொல்லிடறே... உனக்குப் போன் வந்திருக்கு. மாப்பிள்ளை கூப்பிடறார். சட்டுனு பதில் நறுக்குத் தெரிச்சாப்பல பேசிட்டுக் காப்பி சாப்பிட வா-'' படபட வென்று பொரிந்தாள் பாட்டி.

'போனில் முரளி கூப்பிடுகிறாரா-!' மகிழ்ச்சியில் திளைத்துப்போய் முன்னறைக்கு விரைந்தாள்.

''ஹலோ அஞ்சனா! எப்படி இருக்கே ராத்திரி நல்லா தூங்கினியா?-'' முரளி மறுபக்கம் சிரித்தான்.

''ஓ! நல்லா தூங்கினேன். உண்மையைச் சொல்லப் போனா கொஞ்சம் தாமதமாகவே எழுந்தேன். அப்படி ஒரு நல்ல தூக்கம்.''

''நான் தூங்கலை. உன்னைப் பத்தி ரொம்ப நினைச்சுக் கிட்டிருந்தேன்.''

சட்டென்று அஞ்சனா வாயடைத்துப் போனாள். காதைத் தழுவின அவனது கனிவான குரல் உடலைப் புல்லரிக்கச் செய்தது.

''இன்னிக்கு நாம ரெண்டு பேரும் ஒரு சினிமாவுக்குப் போகலாமா? உன்னோட இன்னும் கொஞ்சம் பேசணும்னு ஆசையா இருக்கு. உங்கப்பாகிட்ட உத்தரவு கேட்டு வை.''

''இருங்க கேட்டுச் சொல்றேன்.'' போனை வைத்துவிட்டு நெஞ்சு மகிழ்ச்சியில் துடியாகத் துடிக்க, சாப்பாட்டறைக்குள் ஓடி வந்தாள்.

''அப்பா! அவர் என்னை இன்றைக்கு ஒரு சினிமாவுக்கு அழைச்சுட்டுப் போக விரும்பறாராம்.'' சொல்லி முடிப்பதற்குள் மூச்சுத் திணறியது அவளுக்கு.

''அடுத்த வாரம் நிச்சயத்தார்த்தம் வச்சுக்கலாம்னு தீர்மானிசாச்சு. அதுக்குள்ளே மாப்பிள்ளைக்கு ரொம்ப அவசரமா இருக்கா?''



அப்பா 'ஹி...ஹி...' என்று சிரித்தார். இட்டிலிகளைத் தட்டுகளில் பரிமாறிக் கொண்டிருந்த பாட்டி சட்டென்று பாத்திரத்தை மேஜையிலே வைத்துவிட்டுப் பேத்தியைக் கண்களால் வெட்டினாள்.

''அவன் கூப்பிட்டா உனக்குப் புத்தி எங்கே போச்சு. எங்க வீட்டிலே இதுக்கு ஒப்புக்க மாட்டாங்கன்னு சொல்றதுக்கு என்ன கேடு. நிச்சயதார்த்தம் கூட ஆகலை. அவனுக்கு என்ன துணிச்சல்? உன்னை அழைச்சிட்டு ஊரைச் சுத்தணுங்கிறானே...'' பாட்டி கோபத்தில் உறுமினாள்.

''என்னம்மா நீங்க அந்தக் காலத்திலேயே நின்னுகிட்டிருக் கீங்க. இந்தக் காலமே வேறு. இந்தக் காலத்து இளசுகளுக்கு எப்படி நடந்துக்கணுங்கிறதும் நல்லாவே தெரியும்.''

அப்பா பரிந்து பேசியதைக் கேட்டதும் பங்கஜத்தின் மூக்கும் கண்களும் சிவந்து போயின.

''அந்தக் காலம் இந்தக் காலம்- எல்லாம் வரதக்ஷணையைப் பொறுத்தவரை மாறுதல்கள் வந்துவிட்டதோ?''

''சேது! இது பெண்கள் விஷயம். நீ தலையிடாதே! கழுத்திலே மூணு முடிச்சு ஏறாதவரை நாமதான் எச்சரிக்கையா இருக்கணும். உனக்கு மறுப்புச் சொல்ல பயமா இருந்தா இப்படி உட்கார்ந்து இட்லி ஆறுமுன்னே உங்க அப்பாவோட சாப்பிடு. நான் மாப்பிள்ளைக்குப் பதில் சொல்லிவிட்டு வரேன்.'' விர் என்று அம்பாக முன்னறைக்கு விரைந்தாள். பாட்டி இறைந்த குரலில் பேசியது அஞ்சனாவுக்கு நன்றாகக் கேட்டது.

''அது சரி தம்பி! ஆனா நாங்க இன்னமும் பழைய கால சம்பிரதாயங்களை விடாம அனுசரிக்கிறவங்க. கிணற்றுத் தண்ணியை வெள்ளம் கொண்டு போகாது- அஞ்சனாவுக்கு வெளி

வாசலில் தனியாப் போய்ப் பழக்கமில்லை. அதனாலே நீங்க மன்னிச்சுக்கணும். அவ சினிமாவுக்கு வரமாட்டா இப்போ...'' போனை பட்டென்று வைத்துவிட்டு வந்தாள்.

''முரளி என்ன நினைச்சுக்கிட்டிருக்கான். நாம அமெரிக்காவிலே இருப்பதாக எண்ணமோ? எப்போ பழங்காலப் பழக்க வழக்கங்களை விட முடியலையோ- அப்போ பழங்காலத்து மனிதனாகவே, அந்தப் பண்புகளோட இருக்கத் தெரிஞ்சுகனும். தனக்கு ஒரு நியாயம் - பிறத்தியாருக்கு ஒரு நியாயமா?'' கத்தினாள்.

அஞ்சனாவுக்குக் கழுத்துமட்டில் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. இந்தப் பாட்டி- எல்லாத்துக்கும்- எப்பவும் ஏதாவது ஒரு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு இருப்பதைத் தொழிலாகக் கொண்டு விட்டாளே?

அப்பா எழுந்து கையைக் கழுவிக் கொண்டு அலுவலக உடையணிய மாடிப்பக்கம் போய்விட்டார். இட்லியைத் தின்ன மனமின்றிப் பிட்டுக் கொரித்துக் கொண்டிருந்த பேத்தியைக் கோபமாகப் பார்த்தாள் பாட்டி.

''உன் நன்மைக்குத்தான் சொல்கிறேன். உனக்கு இதெல்லாம் எப்பப் புரியப்போறதோ தெரியலை. இதுக்கு முன்னாடி பட்ட அனுபவத்திலே கூட உனக்கு இன்னும் புத்தி வராதது அதிசயமா இருக்கு. உம்- சாப்பிட்டுட்டு எழுந்திரு. மலைச்சுப்போய் உட்கார்ந்துடாதே. ஒரு புடவை எடுத்துக் கட்ட பீரோவிலே அடுக்கியிருந்த அத்தனையையும் நேத்திக்கு கலைச்சுப் போட்டிருந்தே. போய் முதல் வேலையா அடுக்கி வை. வீட்டை ஒழுங்காக வச்சுக்கப் பழகிக்கோ. ஒரு வேலையும் தெரியாத ஒரு மட்டிப் பொண்ணைத் தன் தலையிலே கட்டி விட்டதாக நாளைக்கு அவன் என்னைத் திட்டக்கூடாது பார். உம் சீக்கிரம்.'' அதட்டினாள்.



எதிர்த்துப் பேசத் துணிவின்றி, தன்னுள் குமுறியபடி, அஞ்சனா விரைவாகக் காப்பி, பலகாரத்தை முடித்துக் கொண்டு, மாடியிலிருந்த தனது அறைக்குள் போய்ச்சாத்திக் கொண்டாள்.

பாட்டி சொல்லியபடி, அவள் பீரோ மிகவும் அலங்கோலமாகத்தான் கிடந்தது. புடவைகளையும் உள் ஆடைகளையும் வாரிக் கோபத்துடன் படுக்கை மீது போட்டுவிட்டு, ஒவ்வொன்றாக மடித்து அடுக்கி வைக்கத் தொடங்கினாள்.

சொன்னதைச் செய்தாளா என்று வேவு பார்க்கப் பாட்டி கொஞ்ச நேரத்தில் கட்டாயம் வந்து விடுவாள். அவளுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து பாட்டி அவள் பின்னால் வந்து கொண்டு ''அதைச் செய்யாதே, அது செய்தால் தப்பு'' என்று எப்பொழுதும் அவளை விரட்டிக் கொண்டிருப்பதே தொழிலாகப் போய் விட்டது.

நெற்றி மீது வியர்வை பொடிக்க...கோபம் நெஞ்சை அடைக்க, அவள் கைகள்சோர துணிகளை மடித்து அடுக்கும்போது அந்த உடை அவளது கண்ணில் பட்டது. அப்பாவிடம் கெஞ்சி, பள்ளிக்கூடம் படிக்கும் நாளில் தனது பதினாலாவது வயது பிறந்த நாளின்போது வாங்கிக் கொண்ட பெல்பாட்டமும் டாப்பும் இன்னும் அப்படியே புதிதாக இருந்தன. அந்த ஜோடியை அவள் சில தடவை தான் உபயோகித்திருந்தாள். எவர்சில்வர் பாத்திரக்காரனிடம் போட்டுவிடப் போவதாகப் பாட்டி பயமுறுத்தியதால், அதைத் தன் பீரோவுக்குள் பதுக்கி வைத்திருந்தாள். இத்தனை வருஷங்களுக்குப் பின்னர்... இப்போது அவள் ஒரு பட்டதாரியாகி, அவைகளைப் பார்த்த போது- திடீரென்று அவள் நினைவில் அந்த கடந்த கால நிகழ்ச்சி நிழலாக வந்து நின்றது.

# 2

அப்பாவுக்குத் தெரிவிக்காத சங்கதி. ஏன் வீட்டில் சர்வாதிகாரியாக எல்லோரையும் விரட்டிக்கொண்டு- வேலை வாங்கிக் கொண்டிருந்த வீராங்கனை பாட்டியிடம் கூட அவள் சொல்லவில்லை. தோழிகளிடம் சொல்லிக் கொள்ளாது தன் மனதுக்குள்ளே அடக்கி வைத்துக் கொண்டு பயந்து பயந்து அவள்-எத்தனை இரவு உறக்கமின்றி விழித்திருக்கிறாள். அப்போ தனது நிறுவனத்தின் தொழிற்பேட்டை அலுவலகத்திற்கு வேலை உயர்வுடன் சகல தகுதியுடன் மாற்றப்பட்டு... அவள் அந்த மதுரைப் பள்ளியை விட்டுச் சென்னை வந்து, கல்லூரியில் படிக்க ஆரம்பித்த பின்னரும்கூட அவளுக்குள் அந்தப் பயம் போகவே இல்லை. இளவயதிலே ஏற்பட்ட இனம் புரியாத அதிர்ச்சி அது. அப்போது, அஞ்சனா பள்ளி முடிவுத் தேர்வு எழுதப் போகும் மாணவியாக இருந்தாள். வயதின் வளர்ச்சி மட்டும்தான் அவளிடம் இருந்ததே தவிர, மற்றபடி இன்னமும் குழந்தையாகவே இருந்து வந்தாள். அப்பாவின் தோழர்களோ, அவர்கள் வீட்டு ஆண்பிள்ளைகளோ வந்தால், அவர்களிடம் ஓடிப்போய்ப் பேசக் கூடாது என்று பாட்டி கண்டித்ததை அவள் அறவே வெறுத்தாள்.

'யார் வந்தாலும் ஹாய்ன்னு கத்திகிட்டுப் பக்கத்திலே போய் இடுச்சிட்டு உட்கார்ந்துக்கணுமா? -எதிரே உட்கார்ந்து மரியாதையா பேசினா போறாதா? பெண்களுக்கு அடக்கம் முக்கியம். அப்படி என்ன ஆண் பசங்கக்கிட்ட ஒரு அரட்டை? அப்பாவின் சிநேகிதன் மகன்னா உனக்கென்ன உறவு வந்திருக்கு?... தொட்டு என்ன பேச்சு வச்சிருக்கு?' பாட்டி கத்து கத்தென்று கத்தி அவளை அடக்கி ஒடுக்கினாள்.

அப்பா மட்டும் அடிக்கடி அவள் பக்கம் பரிந்து பேசுவார். குழந்தையை விடு. ராமு யார்? என் சிநேகிதன் மகன். சின்ன வயசிலிருந்து தெரிஞ்சவன் தானே என்பார்.



உடனொத்த தோழிகள் வீட்டில் சிரிப்பும் கும்மாளமுமாக எல்லாரும் எல்லோரிடமும் பேசி மகிழ்ந்து கொண்டிருக்கும் போது, அவளுக்கு மட்டும் ஏன் இந்தத் தண்டனை? மனம் குமுறிக்கொண்டு இருந்தாள். அப்போது அவர்கள் வீட்டில் புதிதாகச் சேர்ந்திருந்தான் சமையல் உதவியாள் பிரசாத். அவளைக் காட்டிலும் இரண்டு வயதுதான் பெரியவன். மாநிறமானாலும் கொழு கொழுவென்று செழிப்பாக வளர்ந்திருந்தவன். சுருட்டையான த[illegible] தலைமுடியைப் பம்மென்று பாகவதர் பாணியில் வாரிவிட்டுக் கொண்டிருந்தான். கழுத்திலே பொன் தோய்த்ததொரு மைனர் செயின். செய்யும் வேலை அடுப்பருகே என்றாலும் ஆள் எப்பொழுதும் பளிச்சென்று வெள்ளை வேஷ்டி சட்டையில்தான் தெரிவான். கொஞ்சம் துணிச்சல்காரன்.

சினிமா நடிகர்- நடிகைகள் பற்றிய எல்லா விஷயங்களும் அவனுக்கு அத்துப்படி. ''புதுப் படங்க இந்த வாட்டி தீபாவளி சமயம் ரிலீஸ் ஆச்சுங்களா... அத்தனையும் ஒரே மாதிரி கதையாம்.''

''முந்தா நாள் காய்கள் வாங்க மார்கெட் பக்கம் போனேன் பாருங்க. என் மேலே இடிக்கிறாப்பல ஒரு கார் போச்சு. அதில் யார் இருந்தாங்கன்னு நினைக்கிறீங்க- நம்ப ஸூப்பர் ஸ்டார்- இருந்தார். சும்மா சொல்லக் கூடாது. படத்தில் பார்த்தாலும் அவர் மிடுக்காத்தான் தெரிகிறார். வெளியிலே வர்ணம் பூசிக்காத வெறும் முகத்தைப் பார்த்தாலும் அழகா கச்சிதமாக இருக்கார்'' படபட வென்று பேசுவான்.

சேதுராமனுக்கு யாராவது சிரிக்கச் சிரிக்கப் பேசினால் போதும். தமது அந்தஸ்தையும், அதிகார பீடத்தையும் மறந்து அவர்களுடன்கூடப் பேச்சில் கலந்து கொண்டு விடும் ஒரு பலவீனம் உண்டு. அதுவும் முதல்நாள் பார்ட்டியில் அவர் முழுகிவிட்டு வந்திருந்தால் போதும். தாமே சமையற்காரப் பையனின் வாயைக் கிளர ஆரம்பித்துவிடுவார்.

நம்ம பிரசாத், ஜாடையிலே அந்த ஸுப்பர் ஸ்டார் போல இல்லே - அஞ்சனா கேட்டு விட்டால் போதும். பிரசாத் நெற்றி மீது விழும் முடியைத் தள்ளிவிட்டுக் கொண்டு அலட்சியமாகக் கரண்டியைக் கத்தி பிடிப்பதாக நினைத்துப் பரிமாறத் தொடங்குவான். பாட்டியின் முகம் ஜிவ்வென்று போய்விடும். வீட்டிலே நெடுங்காலமாக இருந்த தவசுப் பிள்ளை தம்பையாவை அப்பா ஏதோ ஒரு திடீர்க் கோபத்தில் அனுப்பி விட்டார். பாட்டி சொல்லியும் இது விஷயத்தில் சேதுராம் சிறிது கடுமையாகவே இருந்துவிட்டார்.

பிரசாத் இளைஞன். சதா சினிமாப் பாட்டும் உல்லாசப் பேச்சுமாக இளமை ஊஞ்சலாடும் நடையில் அவன் சமையல் அறையில் தனி ஆட்சி செலுத்தியது அப்பாவுக்குப் பிடித்திருந்தது. அதைவிட அஞ்சனா அந்த மாறுதலைப் பெரிதும் வரவேற்றாள்.

''ஹாய் பிரசாத்! இதோ பார் அப்பா எனக்கு வாங்கித் தந்த பெல்பாட்டம் டாப். பிறந்தநாள் பரிசு'' என்று அவனிடம் போய் நின்றபோது அவன் அவளை வைத்த கண் வாங்காது பார்த்தான்.

''அஞ்சனா! நீ இதில் ரொம்ப அழகா இருக்கியே. அப்படியே நடிகை நந்தியைப் போல- ஜம்முனு இருக்கியே''- சொல்லிவிட்டு லேசாக அவள் கன்னத்தை துணிவுடன் கிள்ளினான். அவள் அதிர்ந்து போய்விடாதிருக்க-சட்டென்று அலமாரியைத் திறந்து அவன் படித்த கதைப் புத்தகங்கள், சினிமா பத்திரிகைகள் அத்தனையையும் அள்ளி அவளிடம் கொண்டுவந்து தந்தான். ''நீ பேசாம பாடப் புஸ்தகத்துக்குள்ளே வச்சுப் படி. பாட்டிக்கு தெரிய வேண்டாம்'' எச்சரித்தான்.

பாட்டிக்கு ஓர் எதிரி வீட்டில் இருப்பது பற்றி அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவன் வந்து சில மாதங்களில் அவள் பாட்டியின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, பிரசாத்திடமிருந்து ரகசியமாகக் கதைப் புத்தகங்களை வாங்கிப் படித்தாள். சினிமா விமரிசனங்களை அவ்வப்போது கேட்டு மகிழ்ந்தாள்.



''இந்தா! உனக்கென்று ஸ்பெஷலா செஞ்சேன் சாப்பிடு'' என்று அவள் கையைத் தொட்டுக் கிண்ணத்தில் பாசந்தியைக் கொண்டு வந்து கொடுத்ததை அவள் பாராட்டவில்லை. ''தாங்க்யூ பிரசாத்'' என்று கண்களில் கள்ளமில்லாது சிரித்தபடி வாங்கிக் கொண்டாள்.

ஒருநாள் நடையில் தனியே நின்றுகொண்டிருந்த பிரசாத்திடம் அவள் தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டிருந்ததைப் பாட்டி பார்த்துவிட்டாள். அவ்வளவுதான் பத்திரகாளியாக மாறிப் போனாள்.

''அஞ்சனா குதிர்போல் வளர்ந்து நிக்கிறயே தவிர உனக்கு புத்தி துளிக்கூடக் கிடையாது. யார்கிட்ட பேசறது? யார்கிட்ட கொஞ்சம் தூரமா இருக்கிறதுன்னு தராதரம் கூடத் தெரியாது உன் அறிவு மயங்கி கிடக்கு. அதுவும் இந்தக் கால் சட்டை, கை சட்டை போட்டுக்கிட்டு அந்த மொட்ட கடங்காரன் முன்னால் பல்லைக் காட்டிக்கிட்டு என்ன பேச்சு? அவன் உன்னை எப்படி முறைச்சுப் பார்க்கிறான் தெரியுமா? இன்னொரு தடவை இந்த உடுப்பை உன் மேலே பார்த்தேனோ- பிடுங்கி நெருப்பிலே போட்டுடுவேன்'' கத்தினாள்.

''பிரசாத்! உன் வேலை சமையல் அறையோடத்தான்னு நினைச்சேன். நீ நம்ப வீட்டுக்குக் கட்டுப்படியாகாத ஆள் அப்பா. அதனாலே...'' பாட்டி தனது முடிவைத் தெரிவிக்கவில்லை. எரித்துவிடுகிறவள் போல அவனைப் பார்த்தாள். மகன் சேதுராமன் வீட்டுக்கு வந்ததும் வராததுமாகக் கத்தினாள். ''சின்ன பொண்ணு ஒண்ணு வீட்டிலே வளர்கிறதுன்னு உனக்கு நினைப்பு இருந்தா, நம்ம தவிசப்பிள்ளை தம்பையாவை அனுப்புவியா? நான் கடிதாசி போட்டு அவரை வரவழைக்கப்போறேன். இந்தப் பயல் பிரசாத்தின் போக்கு, பேச்சு எனக்குப் பிடிக்கலை.'' இரைந்து கத்தினாள்.

பிரச்சனை அத்துடன் தீர்ந்துவிட்டது என்றுதான் பாட்டி நினைத்துக் கொண்டிருந்தாள். ஆனால் நடந்தது?

அன்று மாலை பாட்டி வாயிலில் எவர்சில்வர்காரனுடன் ஏதோ பேரம் செய்து கொண்டிருந்த சமயம், பிரசாத் முன்னறையில் புத்தகம் படித்துக் கொண்டிருந்த அவள் அருகே வந்து நின்றான். மூக்கைத் துளைக்கும் செண்ட் வாசனை அவன் மேலேயிருந்து ஜமாய்த்தது. ''அந்த நந்தினிவிட நீ ரொம்பவே அழகா இருக்கே அஞ்சனா'' என்று சொல்லிக் கொண்டே அவள் படித்த புத்தகத்தைப் பிடுங்கித் தூர எரிந்துவிட்டு அவளது கரங்கள் இரண்டையும் பற்றிக் கொண்டான். ஒரு வினாடி கிலியால் திகைத்துப் போனாள் அவள். திடும் என்ற ஒரு அருவருப்பான எதிர்ப்பு உணர்ச்சி அவளது குழந்தை உள்ளத்தில் விழித்துக் கொண்டது.

''யூ ஸ்டுப்பிட் ஃபூல்... எடுடா கையை'' உதறினாள் சீற்றத்துடன்.

'' உன்னை நான் காதலிக்கிறேன். உன் பாட்டிக்குத் தெரியாம இன்னி ராத்திரி என்னோட ஓடி வந்துவிடு'' படபடவென்று அவன் சொல்லியதைக் கேட்டு அதிர்ந்து போனாள்.

''அப்பா'' என்று அலறியபடி அவள் எழுந்தாள். அருகில் சாப்பிட அவன் கொண்டு வந்து வைத்திருந்த பாதாம்கீர் டம்ளர் படார் என்று தரைமேல் விழுந்து கம்பளத்திலே பாதாம்கீர் பரவி நிறைந்தது. 'என்னம்மா' என்று கேட்டபடி அப்பா மாடியிலிருந்து இறங்கி வந்ததைக் கண்ட அவன் மாயமாகி விட்டான்.

அன்று இரவு சாப்பாடு பரிமாறுமுன் அவன் பார்த்த பார்வையில் அவள் நடுங்கிப் போனாள். 'என்னவாச்சும் உங்கப்பன்கிட்டே சொன்னே- உன் கழுத்தை நெறிச்சுடுவேன்' என்ற கொலை வெறி.

ஏன் இந்தத் தவறு? அவளுக்குப் புரியவில்லை. திகிலும் குற்ற உணர்வுமாக நடந்ததைத் தன்னுள்ளே அடக்கிவைத்துக் கொள்ள முயன்றாள். பிரசாத் அதற்குப்பின் அங்கு வேலையில் நீடிக்கவில்லை. இரண்டே தினங்களில் தன் சம்பள பாக்கியை வாங்கிக்கொண்டு மூட்டையைக் கட்டிக் கொண்டு வெளியேறி விட்டான். அப்பாடா ஒழிஞ்சான் சனியன் என்ற நிம்மதியில் அவள் சில தினங்களில் அதைப்பற்றி மறந்துவிட முயன்றாள்.



பரீட்சை முடிந்த அன்று ஷாலினிதான் அந்த யோசனையைச் சொன்னாள். ''நாமெல்லாம் வெவ்வேறு கல்லூரிக்குப் படிக்கப் போயிடுவோம்- பிரிஞ்சுபோகப்போற நாம் எல்லோரும் ஒண்ணா சேர்ந்து எதிர் ஓட்டலில் ஐஸ் கிரீம் சாப்பிடுவோம்.'' சிறிது நேரத்தில் கூண்டிலிருந்து விடுபட்ட குருவிகளாகக் கூச்சலும் சிரிப்புமாகக் கிரீச்சிட்டபடி ஓட்டலுக்குள் கும்பலாக அவர்கள் நுழைந்தனர்.

ஐஸ்கிரீம் சாப்பிட்டா தொண்டை கட்டிக்கும்னு பாட்டி கத்துவாள். ஆனாலும் அஞ்சனா துணிவாக அன்று ஐஸ்கிரீமைத் தோழிகளுடன் ரசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். ஷாலினி பில் கொடுத்துவிட்டு வரும் வரை சற்று ஒதுக்குபுறமாகத் தன் தோழிகளுடன் உரையாடியபடி நின்றவள் ''ஹாய்'' என்ற குரல் கேட்டுத் திரும்பினாள். பிரசாத் இன்னும் சற்றுக் குண்டாக மாறிப்போய், அதே வெள்ளை வேஷ்டி, ஷர்ட்... சிங்கமுடிபோல் கிராப்பு கழுத்தில் புரள மைனர் செயின் பளபளக்க பற்கள் தெரிய சிரித்தான்.

''எங்கே வந்தே அஞ்சு?'' விஷமச் சிரிப்புடன் ஐஸ்கிரீம் கிண்ணங்களைத் தட்டில் அடுக்கிக் கொண்டே கேட்டான்.

அவளுக்கு ஆத்திரம். ''அஞ்சுவாம் அஞ்சு! ஸில்லி இடியட்? யாருடி இவன்! உன்னை ரொம்பத் தெரிஞ்சவன் போலப் பேசறான்?'' கேட்டுவிட்டாள் தோழிகளில் ஒருத்தி.

''எங்க வீட்டிலே சமையல்வேலை செய்த ஸ்டுப்பிட்.'' வெறுப்புடன் வார்த்தைகளை உமிழ்ந்துவிட்டுப் புறப்பட்டாள்.

அது சமயம்... பிரசாத் அருகில் வேகமா நடந்து கொண்டிருந்த மற்றொரு ஓட்டல் சிப்பந்தி கேட்டது அவள்

காதுகளில் தெளிவாக விழுந்தது, ''யாருடா இந்தக் குட்டி? ஷோக்கா இருக்காளே.''

''அவ என்னோட மாஜி காதலிடா... வீட்டை விட்டு என்னோட ஓடிவருவேன்னு பிடிவாதம் பண்ணினா. பெரிய வீட்டு மனிதன் வம்பை விலைக்கு வாங்க முடியுமா- போலீசை வச்சுப் பின்னிக் கட்டிடுவானே. அனுபவிச்சவரை போதும்னு விட்டு ஓடிவந்துட்டேன்'' இடி இடி என்று அவன் சிரித்தபோது அவள் மனதில் அதிர்ச்சி இடியாக விழுந்தது.

அடப் பாவி! கன்னா பின்ன வென்று பொய் பேசிப் பெயரை மாசுப்படுத்துகிறானே. ''நல்ல வேளை சிநேகிதிகள் காதில் படவில்லை. மானமே போயிருக்குமே... தப்பினேன்'' என்று எண்ணிப் பதறியபடி வீடு வந்து சேர்ந்தாள்.

அதற்குப்பின்னர் அவள் வெளிய போகக்கூட முயலவில்லை. கடைத் தெருவிலோ- சினிமா தியேட்டரிலோ- எங்கேயாவது அந்தப் பாவி கண்களில் தென்பட்டு விட்டால்...? நினைத்த போதெல்லாம், அவன் சிங்கத் தலை முடியைச் சிலுப்பிக் கொண்டு கண்களால் உருட்டிப் பார்ப்பது போன்ற ஒரு பிரமை. எத்தனை இரவு அவனைப் பற்றிய பயங்கரக் கனவு? அவள் கரத்தைப்பற்றி அவன் கரகரவென்ற இழுத்துக்கொண்டு ஓடுவது போன்ற அர்த்தமற்ற வெறுப்பான கனவுகள். ரொம்ப பயத்தில் தவித்துப் போனாள். ஆனால் பாட்டியிடமோ - அப்பாவிடமோ நடந்ததைப்பற்றி மூச்சுவிடவில்லை.

நல்லவேளை அப்பாவுக்குச் சென்னைக்கு மாற்றலாகியது. அவள் கல்லூரியில் சேர்ந்து படிக்கத் தொடங்கிய பின்னர், சூழ்நிலையும் சந்தர்ப்பங்களும் மாறியதும்- அவளும் ஓர் இளம் பெண்ணாக, சற்றுத் துணிவு நிறைந்தவளாக, வளரத் தொடங்கிய பின்னர்தான், பிரசாத்தைப் பற்றிய நினைவு அவளிடமிருந்து மறைந்தது. அந்த பயமும் நாளடைவில் தானே கரைந்து போயிற்று.

# 3

எல்லாத் துணிகளையும் எடுத்து ஒழுங்காக வைத்து விட்டுப் பீரோவை மூடிவிட்டு அன்று காலை வந்த பத்திரிகையைப் புரட்டியபடி சோபாவில் சாய்ந்தாள். மறுபடியும் ஒரு லேசான அதிர்ச்சி. பத்திரிகையில் கண்டதொரு புகைப்படம் அவளைக் கலவரப்படுத்தியது. வெளிநாட்டிலிருந்து திரும்பிவிட்டிருந்த கௌசிகன் எம்.பி.ஏ.க்குப் பாராட்டு விழா நடத்த ஏற்பாடு செய்திருந்த அவன் வேலை பார்த்த நிறுவனத்து ஊழியர்கள் அவனுக்கு நல்வரவு கூறிப் போட்டிருந்த புகைப்படம்.

வெளிநாடு போனால் என்ன? அவன் இந்த உலகத்தைவிட்டுப் போனால் தான் என்ன? புகைப்படத்தில் அதே வில்லன் சிரிப்பு... கல்லூரித் தோழி கங்கா வீட்டுக்கு அடிக்கடி போய் வந்ததின் விளைவு அந்த அனுபவம். கங்காவின் பெற்றோர்கள் டெல்லியின் வசித்தனர். கங்கா பாட்டி தாத்தா கவனிப்பில் சென்னையில் படித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு வீடு கொண்டமட்டும் உறவினர்கள் நிறைய இருந்தனர். அவளது பாட்டி பல சமூக சேவைகளில் ஈடுபட்டிருந்தாள். பெரும்பாலும் வீட்டிலேயே இருக்கமாட்டாள். தாத்தா காது கேட்காதவர், பாரிச வாயுவேறு. மாடியில் படுக்கையிலே கிடந்தார். வீடு கங்காவின் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

அடிக்கடி அவளது ஒன்றுவிட்ட அண்ணன்களும் - தம்பிகளும் - தங்கைகளும் அவள் வீட்டில் கூடுவார்கள். சமையல ஆள் பரிமாறும் கூல் டிரிங்குடன் அவர்களுக்குள் அரட்டை கச்சேரி பலமாகவே இருக்கும். என்ன காரணமோ பார்த்த அளவில்- கங்காவின் ஒன்றுவிட்ட அத்தான் கௌசிக்கை அவளுக்குப் பிடிக்கவில்லை.

அவன் கண்களில் ஒரு திருட்டுப் பார்வை- பச்சையான பேச்சு, பெண்களைப் பற்றிய அவனது அசட்டை மனப்போக்கு, எல்லாம்- அவளுக்குப் பிடிக்காமல் போய் விட்டிருந்தது. ஆனால் ஏதாவது சமயங்களில் சந்திக்க நேர்ந்தால் அவன் அவளைத் தொட்டுப் பேச முயற்சிப்பதுண்டு.

''கையை எடு, எனக்கு இப்படி நெருங்கி நின்னு பேசினா பிடிக்காது.'' பலமுறை எச்சரித்திருக்கிறாள். ஆனாலும் கங்கா வீட்டுக்குப் போவதை நிறுத்தவில்லை. அங்கே நடக்கும் கேளிக்கைகளில் அப்படி ஓர் ஈர்ப்பு.

''வேளை கெட்ட வேளையில்பிறர் வீட்டுப் பார்ட்டிகளில் ஏன் போய்க் கலந்துக்கணும்? அங்கே பல தடிப்பசங்கள் வந்ததாகக் கேள்விப்பட்டேன், அஞ்சனா நீ கல்யாணத்துக்கு இருக்கிற பெண்.'' பாட்டி சொன்ன போது அவளுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. ''என்னைக் காப்பாத்திக்க எனக்குத் தெரியும். எப்பப் பார்த்தாலும் நான் குழந்தை போல ஏதாவது சொல்லிக் கொண்டிருக்கணுமாக்கும்-'' எரிந்து விழுந்தாள். அப்பாவிடம் தனிப்பட்ட முறையில் உத்தரவு வாங்கிக்கொண்டு பாட்டியின் பேச்சை எதிர்த்துக் கொண்டுதான் கங்காவின் பிறந்த நாள் பார்ட்டிக்குப் புறப்பட்டிருந்தாள்.

கங்காவின் பாட்டி சொல்லிவிட்டாள். ''குழந்தைகளே உங்களுக்குச் சுதந்திரம் கொடுக்கிறேன். காப்பாத்திப்பீங்கன்னு நம்பிக்கை. நான் கொஞ்சம் வெளியில் போகணும். பாப் மியூசிக் போட்டு ரொம்பக் கலாட்டாப் பண்ணாம - பார்ட்டியை சந்தோஷமாகக் கொண்டாடுங்கோ-'' என்று கூறிவிட்டுக் கிளம்பி விட்டாள். ஏறக்குறைய அதுசமயம் பார்ட்டியும் முடிந்து விட்டிருந்தது. கேக்கையும் குளிர்பானங்களையும் தீர்த்துவிட்டு... ஆளுக்கு ஒரு மூளையில் நின்றபடி வம்பு அளந்து கொண்டிருந்தனர். இருட்டி விட்ட நேரம். வேலையாள் விளக்கைப்



போட்டுவிட்டுப் பின் பக்கம் போய்விட்டான். குளியலறைக்குச் சென்று கையையும் முகத்தையும் கழுவிக் கொண்டு கிளம்ப உத்தேசித்த அஞ்சனா அங்கிருந்த அறைக்குள் நுழைந்தாள். பின்னாலேயே கௌசிக் நுழைந்தான். பட்டென்னு கதவைச் சாத்திக் தாளிட்டான்.

''இந்தச் சந்தர்பத்துக்கு நான் எத்தனை நாளா காத்திருக்கேன் தெரியுமா?'' சொல்லியபடி அருகில் வந்து அவளை அணைக்க முயன்றபோது அவள் நடுங்கிப்போய் அப்பால் நின்றாள்.

''போயிடு- என்கிட்டே வாலாட்டினா...கத்தி எல்லாரையும் கூப்பிடுவேன்'' மிரட்டினாள்.

'' கத்திக்கோ! அவங்க காதுலே கேட்காது. எல்லாரும் சீட்டாட மாடி ஏ.சி. அறைக்குப் போயிட்டாங்க. வேலைக்காரன் கூட வெளியே போயிட்டான். அதனாலே -'' சொல்லிக் கொண்டே அவளைத் தன் அருகே முரட்டுத்தனமாக இழுத்தான்.

இரவிக்கையின் பின்புறத்தைக் கிர்ரென்று அவன் கிழிப்பதை உணர்ந்து நடுங்கிப் போனாள். சினிமாவில் வரும் வில்லன் போல அவளைச் சின்னா பின்னாப்படுத்தத் துணிஞ்சு விட்டானே பாவி! திடீரென்று ஏற்பட்ட துணிச்சலில்-அவனது தோள்பட்டையை அழுத்தி இரத்தம் வரும் வண்ணம் கடித்துவிட்டாள்.

''பாவி! அத்தனை துணிச்சலா...'' ஓங்கி அவள கன்னத்தில் அவள் ஓர் அறை விட்டதைக் கூடப் பொருட்படுத்தாது அவன் தன் தோள் பட்டையத் தடவிக் கொண்டிருந்த சமயம் பார்த்து - கதவைத் திறந்து கொண்டு வெளியே தலை தெறிக்க ஓடினாள். நல்ல வேளை. அழைத்துப் போக அவள் அப்பா அனுப்பிய கார் தோட்டத்தில் தயாராக இருந்தது. யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல், புடவைத் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு

அன்று அவள் வீடு வந்து சேர்ந்த அலங்கோலத்தை மறக்கவே முடியவில்லை.

மாடிக்கு ஓடி வேறு துணி உடுத்திக் கொண்டு பரபரப்புடன் வந்த பேத்தியை மேலும் கீழும் பார்த்தாள் பாட்டி. ''என்னவோ போல இருக்கியே, என்ன நடந்தது?'' பாட்டி பல தடவைக் கேட்டும் பயன் இல்லை.

நடந்ததைச் சொன்னால் நல்ல மண்டகப்படி கிடைக்கும். மேலும் அவர்கள் கூட்டத்தில் கௌசிகன் பொல்லாதவன். பெண்கள் என்றால் கொஞ்சம் சபலம் என்ற ஒரு பேச்சு அடிபட்டது உண்மை. இந்தப் பொல்லாதவனிடம் வீண் வம்பைத் தொடர்ந்து வைத்துக் கொள்வானேன்? மௌனமாக இரகசியமாகத் தனக்குள்ளே அந்த அதிர்ச்சியை அடக்கி வைத்துக் கொண்டாள். அதற்குப் பின் அவள் கங்கா வீட்டுத் தொடர்பைக் கத்தரித்துக் கொண்டாள். கொஞ்ச நாட்களில் கௌசிக் மேல் படிப்புக்கு வெளிநாட்டுக்குப் போய் விட்டதாகக் கேள்விப் பட்டபோது மறுபடியும் அப்பாடா என்று மனதில் ஒரு நிம்மதி...

இப்போது அவன் திரும்பி விட்டிருக்கிறான் போலிக்கிறது. அவன் அந்த நிகழ்ச்சியை மறந்துவிட்டிருப்பானா? அவனைப் போன்ற துஷ்டர்களுக்குப் பெண்களிடம் அடிபடுவது சர்வ சாதரணமான விஷயமாக இருக்கவேண்டும். அவனைப் பத்தி...அவள் ஏன் இனிக் கவலைப் படவேண்டும்? அவளுக்கும் முரளிக்கும் இன்னும் சில தினங்களில் திருமணம் நிச்சயமாகப் போகிறது. பின்னர் கல்யாணம். அதற்குப் பின் அவள் அடக்கமாக, அவன் மனைவியாக, ஒரு குடும்பத் தலைவியாக இருக்கப் போகிறாள். கிடக்கிறான் இந்தக் கௌசிக். பத்திரிகையை மடித்துத் தூரப்போட்டு விட்டுக் கீழே இறங்கிச் சென்றாள்.

ஒரு வார காலம் ஓடிச் சென்றது. பாட்டியும் சம்பந்தியம்மாளும் அடிக்கடி போனில் பேசிக் கொண்டனர்.



மெருகு போட்டு வைத்திருந்த நகைகளையும் வெள்ளிப் பாத்திரங்களையும் பார்வையிட முரளியின் தாயார் இருமுறை வந்து போனாள். புடவைகளின் விவரம், வாங்க வேண்டிய எண்ணிக்கை எல்லாவற்றையும் பற்றி ஒரு தனி ஜாபிதாவே கொடுத்து விட்டிருந்தாள் சம்பந்தியம்மாள்.

பாட்டி பங்கஜம் சுபாவத்தில் முன்கோபக்காரி. ஆனால் இது கல்யாண விஷயம், ஆயிரம் காலத்துப் பயிர் என்ற சங்கதி... பொறுமையோடு சம்பந்தியம்மாள் சொன்னதற்கெல்லாம் தலையசைத்துக் கொண்டிருந்தாள்.

அன்று மாலை சம்பந்தியம்மாள் அவசரமாகத் தொலைபேசியில் பாட்டியைக் கூப்பிட்டாள். ''ஒரு முக்கிய சங்கதி. நானும் இவரும் வரப்போகிறோம். உங்க மகனையும் வீட்டில் இருக்கச் சொல்லுங்கள்'' என்று உத்தரவிட்டாள்.

பாட்டி பங்கஜத்திற்குக் குழப்பமாகத்தான் இருந்தது. ஏன் இப்படி உத்தரவு? என்ன விஷயம்...? ''வெள்ளிக் குத்துவிளக்கு இரண்டு வேண்டும்'' என்றாள்.

தொலையட்டும் என்று செய்ய ஏற்பாடு செய்திருந்தாள். இன்னும் என்னென்ன கேட்க... இந்த முன்னெச்சரிக்கை - கலவரத்துடன் அவர்களை வரவேற்க டிபனும் காப்பியுமாகக் காத்திருந்தாள்.

சம்பந்தியம்மாள் முகத்திலே சதா தவழ்ந்த அந்தப் போலிச் சிரிப்பு மாயமாகிவிட்டிருந்தது. நடையில் ஒரு மிடுக்குத் தெரிந்தது. முன்னறையில் சோபாக்களில் தொப்பென்று விழுகிறவர்கள் போலக் கணவனும் மனைவியும் உட்கார்ந்தனர்.

காப்பி...டிபன் என்று பங்கஜம் ஆரம்பித்தபோது-அதை விடச் சூடாகச் சம்பந்தியம்மாளிடமிருந்து பதில் வந்தது. ''நாங்க இப்போ காப்பி டிபன் உபசரிப்பை வாங்கிக்க வரலை. ஒரு முக்கிய சங்கதியைக் கேட்டு விவரம் புரிஞ்சிக்க வந்திருக்கோம்''

கணவனை ஒதுக்கிவிட்டு நெருப்புக் கண்களால் பாட்டியையும் சேதுராமனையும் பார்த்தாள் சம்பந்தியம்மாள். தன் கைப்பையைத் திறந்து ஒரு கடிதத்தை எடுத்து அவளிடம் நீட்டினாள்.

''பெண் பார்க்க நாங்க வந்த போதே உங்க உறவு மனுஷங்களைக் கூப்பிடாம, காதும் காதும் வச்சாப்பல விஷயத்தை நடத்தினப்போவே, என் மனத்திலே ஓர் உறுத்தல் ஏற்பட்டது. அது நிஜம் ஆகி விட்டது.'' படபடத்தாள். பங்கஜம் கடிதத்தை வாங்கிப் பிரித்தாள். தலையும் வாலுமில்லாத ஒரு மொட்டைக் கடிதம் அது.

''உங்கள் மகன் முரளிக்கும் கவிதா எலக்ட்ரானிக்ஸ் வொர்க்ஸ் நிறுவனத்து மானேஜர் சேதுராம் மகள் அஞ்சனாவுக்கும் திருமணம் நிச்சயிக்கப்படும் செய்தியைக் கேட்டு உங்களை ஆபத்தினின்று காக்கும் நோக்கத்தோடு இதை எழுதுகிறேன். அஞ்சனா ஏற்கனவே ஒரு கல்லூரி மாணவனுடன் தொடர்பு கொண்டு கெட்டழிந்தவள். கருச்சிதைவு செய்துவிட்டுத் தன் பேத்தியை ஒருத்தன் தலையில் கட்டத் திட்டமிட்டிருக்கிறாள் அவளுடைய எமகாதகப் பாட்டி. உங்கள் மகனுக்கு இந்தப் பரந்த தமிழ் நாட்டில் வேறு ஒரு கௌரவமான இடத்தில் பெண்ணா கிடைக்க மாட்டாள்? அஞ்சனாவை மருமகளாக்கிக் கொண்டால் நீங்கள் அவமானப்படுவீர்கள். அவளது மாஜி காதலர்கள் 'க்யூ' வரிசையில் உங்கள் வாசலில் வந்து நிற்பார்கள் எச்சரிக்கிறேன். உங்கள் நலம் விரும்பும் நண்பன்.''

முகம் சிவந்து நெஞ்சு பதறிப்போன பாட்டி பங்கஜம் கடிதத்தை மகன் கையில் கொடுத்தாள். ஆனாலும் துணிவை இழக்கவில்லை. ''இது ஒரு மொட்டைக் கடிதம். யாரோ பொறாமைப்பட்டுக் கொண்டு எழுதியிருக்காங்க. அதை நீங்க ஏன் பெரிசா எடுத்துக்கணும்.''

''நெருப்பில்லாம புகை வராது. உங்க பேத்தி மேலே ஏதோ தப்பு இருந்திருக்கணும்'' என்றதும், சேதுராமனுக்குக் கோபம் தாள முடியவில்லை. ''சரி. என் பெண் இந்தக் கடிதத்திலே சொன்னபடி



அழிஞ்சு போனவள்னு வச்சுக்குவோம். உங்க முடிவு என்ன?'' உரக்கக் கத்தி விட்டார்.

மறுபடியும் சம்பந்தியம்மாள் பேசினாள். ''கண்ணால பாக்காததை மண்ணால மறைச்சிடலாம்னு ஒரு பழமொழி. நாங்க மறந்து மன்னிச்சிடத் தயார். ஆனால் ஒரு நிபந்தனை...''

''சொல்லுங்க கேட்டுக்கிறோம்...'' பாட்டி வேதனையுடன் முனகினாள்.

''வரதக்ஷிணையை இரட்டிப்பாகப் பெருக்கி...ஐம்பது ரூபாயாகக் கையில் கொடுத்தால் முரளி தாலி கட்டுவான். இல்லாவிட்டால் இந்தக் கல்யாணம் நடக்காது.''

பங்கஜத்தினால் அதற்கு மேல் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ''பணம் அதிகம் கொடுத்தால் பழி அழிஞ்சு போயிடும்னு நினைக்கிறீங்க. பணத்தினால் எல்லாப் பாபத்தையும் மூடிவிடலாம்னு உங்களுக்கு நம்பிக்கை இருக்கு. எனக்கு இல்லை. பரவாயில்லை நாம் இன்னமும் நிச்சயம் செய்யலை. அதனாலே இந்த இடம் எங்களுக்கு வாய்க்காட்டா, நாங்க ஒண்ணும் ஓஞ்சு போயிடமாட்டோம்.''

''அப்படீன்னா? -''உறுமினாள் முரளியின் தாய்.

''அப்படீன்னா, நாங்க உங்களது நிபந்தனைக்குக் கட்டுப்படப் போவதில்லை. எங்க பெண் குற்றமற்றவள்னு எவன் நம்பிக்கொண்டு அவள் கழுத்தில் தாலியைக் கட்டுகிறானோ அவனை அவளுக்குக் கட்டிவைப்போம். ஆரம்பத்திலேயே நீங்க பயமுறுத்தலா காரியத்தை ஆரம்பிச்சா - எங்கே போய் நிப்பீங்களோ சொல்ல முடியாது. எங்களுக்கு இந்தச் சம்பந்தம் வேண்டாம். நீங்க போகலாம்'' என்றாள் மிடுக்காக.

''அந்தக் கடிதாசியைக் கொடுங்கோ'' என்று முரளியின் தாய் கேட்டபோது பெண் புலியாகப் பங்கஜம் சீறிவிட்டாள்.

''அதைப் பலரிடம் காட்டி எங்களைச் சிறுமைப்படுத்த நினைச்சா சும்மா இருக்க மாட்டேன். இது எங்கள் வீட்டு கௌரவப் பிரச்னை. இதைப் போலீசில் ஒப்புடைச்சி, எழுதியவனைக் கண்டுபிடிச்சி தண்டனை வாங்கித் தரணும்...''

சம்பந்தியம்மாள் 'விர்' எனக் கணவனுடன் வெளியேறினாள். மாடிப்படியில் நின்று எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த அஞ்சனா வெடவெடவென்று நடுங்கிப் போனாள். ஒரு வார காலம் கட்டியிருந்த கற்பனைக் கோட்டை தகர்ந்து பொடியாகியது. அவளது மனக் கண்ணில் தோன்றி மயக்கிய முரளி அம்மாவின் புடவைத் தலைப்பின் பின்னால், மறைந்து கரைந்து போனான். அவளது கல்யாணம் நின்று போனது என்பதை உணர்ந்து, அவள் அழுத அழுகை!...

பங்கஜத்திற்கு மிகவும் ஏமாற்றமாகத்தானிருந்தது. பரீட்சையில் தோல்வியுற்று விட்டது போன்றதொரு தீவிரத் துயரம் மனதைப் பிழிவதை உணர்ந்தாள்.

ஆனால் டெலிபோனில் சங்கதியை விசாரித்த சினேகிதிகளிடம் சமாளித்து விட்டாள் அஞ்சனா.

''எங்கள் ஜோசியர் ஜாதகம் பொருந்தவில்லை என்று கூறிவிட்டார். அதற்கு மேலே என் மகனுக்குத் துணிந்து இந்த சம்பந்தத்தில் இறங்க அச்சமாக இருந்தது. வேண்டாம்னு ஒதுங்கிக் கொண்டு விட்டோம்.''

''அதைக் கேட்கிறீங்களா? பையனுக்குக் காக்கா வலிப்பு வர்றதுண்டு என்று அவங்க உறவுக்காரங்க ஒருத்தர் ரகசியமாச் சொல்லிவிட்டார். பயமாயிடுச்சு...... வெட்டிக்கொண்டு விட்டோம்'' சாமர்த்தியமாக நிலைமையைச் சரிக்கட்டினாள் பங்கஜம்மாள்.

அத்துடன் நிற்கவில்லை; முரளிக்குக் கல்யாணம் ஆகிவிடுமுன்... தன் பேத்தியை ஒரு நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்துவிட வேண்டுமென்றதொரு தீவிர ஆதங்கம் அவளுள் ஏற்பட்டுவிட்டது. கல்யாணத் தரகர்களிடம் சொல்லி வைத்திருந்தாள். பத்திரிக்கைகளில் மணமகள் தேவைப் பகுதியை ஊன்றிக் கவனித்துச் சில விளம்பரங்களுக்குத் தானே பதில் போட்டாள். தன் வயதை ஒத்த சினேகிதிகளிடம் ஜாடையாக வரன் தேவை பற்றிச் சொல்லி விட்டிருந்தாள்.



கல்யாணம் என்பது பெண்ணுக்கு மட்டும் தேவையான அந்தஸ்து அல்லவே. ஆணுக்கும் துணை அவசியமாயிற்றே. அதனால் அதற்குப் பின்னர் அஞ்சனாவைப் பெண் பார்க்கப் பிள்ளை வீட்டார்கள் சிலர் வந்தனர். என்ஜினியர், டாக்டர், வக்கீல், எம். பி. ஏ. என்ற படித்த இளைஞர்களின் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் அவளைப் பெண் பேச வந்தனர். ஜாதகங்கள் பொருந்தின. பெண் பிடித்திருந்தது. வரதக்ஷிணை மிகவும் பிடித்திருந்தது. எல்லா நிபந்தனைகளுக்கும் சேதுராமன் தலையாட்டினார். பாட்டி பங்கஜம் மாப்பிள்ளை வீட்டார்களைப் பரிவுடன் உபசரித்தாள். ஆனாலும் நிச்சயதார்த்தத்தை நெருங்கு முன் சம்பந்தி வீட்டார்கள் நழுவினார்கள்.

''இந்த வருஷம் எங்கள் பிள்ளை கல்யாணத்துக்குத் தயாராக இல்லையாம்'' என்று நழுவினார் என்ஜினியர் தந்தை.

''குலதெய்வத்திடம் பூக்கட்டிப் போட்டோம். சரிப்பட்டு வரவில்லை.'' கடவுள் மேல் பழி போட்டுவிட்டு மறைந்தார் வக்கீலைப் பெற்றவர்.

''புடவை வாங்கக் கிளம்பினோம். விளக்கணைஞ்சு போச்சு. என் மனைவிக்கு மனசுக் குழப்பம் ஏற்பட்டு விட்டது. மன்னிச்சுக்குங்க...'' மழுப்பிவிட்டு விரைந்தார் இன்னொரு பெரிய மனிதர்.

கடைசியாகப் பார்த்த எம். பி. ஏயின் தந்தை உண்மையை உடைத்துச் சொல்லிவிட்டார். ''எங்களைப் பொருத்தவரை -

நேற்றுவரை இந்தச் சம்பந்தம் எங்களுக்கு நூற்றுக்கு நூறு பிடிச்சிருந்திச்சு. மாலை தபாலில் வந்த கடிதாசியைப் பார்த்த பிறகு மனத்திலே ஒரு கலக்கம் ஏற்பட்டுவிட்டது. என் பையன் அவனது நிறுவனத்திலே ஓர் உயர்ந்த பதவியை வகிக்கிறான். இந்த மாதிரியான அசிங்கமான செய்திகள் அவன் வருங்காலத்தைப் பாதிக்கும். உங்க பேத்தியை அவளைப் பாழாக்கினவனுக்கே கட்டிக் கொடுத்து விட்டால் பிரச்சனை தீரும்.''

''அந்தக் கடிதாசியை கொடுக்க முடியுமா? நாங்க பார்க்க வேண்டாமா?'' பங்கஜம் பற்களைக் கடித்துக் கொண்டு கோபத்துடன் கேட்டாள்.

''ரொம்ப அசிங்கமாக இருந்தது. கிழிச்சுப் போட்டுட்டேன். ஊர் விவரம் இல்லை. மொட்டைக் கடிதாசி...விவரத்தை நீங்களே உங்க பேத்தி கிட்டக் கேட்டுத் தெரிஞ்சிக்கிறதுதான் நல்லது'' மனிதர் பட்டென்று கூறிவிட்டு வெளியேறி விட்டார்.

இத்தனை காலமாக...எல்லாவற்றையும் தாயிடம் விட்டுவிட்டு ஒதுங்கிக் கொங்கிக் கொண்டிருந்த சேதுராமனுக்குத் திடீரென்று ரோஷம் பொத்துக்கொண்டு கிளம்பியது. முன்னறையையும் சாப்பாட்டு அறையையும் தடுத்த டிஸ்ப்பிளே காபினெட்டின் பின்னால் ஒண்டியபடி, எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த அஞ்சனாவிடம் வந்தார். இடுப்பிலிருந்த பெல்ட்டை வேகமாக உருவிக்கொண்டார்.

''எல்லாத்தையும் கேட்டுட்டுதானே நிக்கிறே. பேசு. வாயைத் திறந்து இப்ப உண்மைணைச் சொல்லு. யார் அவன்? மொட்டைக் கடிதாசி எழுதிக் குட்டையைக் குழப்பிவிட்டுக் கல்யாணத்தைத் தடுத்துக்கிட்டிருக்கிற உன் காதலன் யாரு? சொல்லு, உரிச்சிடுவேன் உரிச்சு!'' தாங்கமுடியாத வெறியுடன் ஓங்கி படார் படார் என்று அவள் முதுகில் வீசினார் ஆங்காரத்துடன்.



''பாட்டி? பாட்டி'' என்று அலறியபடி கீழே சுருண்டு விழுந்து விட்டாள் அஞ்சனா. கையில் பிடித்துக் கொண்டிருந்த காப்பிக் கெட்டிலை மேஜை மேல் தடால் என்று வைத்துவிட்டு, ஒரே பாய்ச்சலாக வந்த பங்கஜம் மகனின் கரத்தை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டாள். நல்ல வேளை, அந்தச் சமயம் வீட்டு வேலைக்காரியோ, சமையல் ஆளோ அங்கு இருக்கவில்லை.

''பாவி! என்ன காரியம் செய்தே? வயசு வந்த பெண்ணை அடிக்க உனக்கு என்ன துணிச்சல்? படிப்பு அந்தஸ்து எல்லாத்தையும் உதறிட்டு வெறிபிடிச்ச நாய் போலப் பச்சைக் குழந்தையை அடிக்கிறாயே! உனக்கு அறிவு இருக்கா?'' ஆத்திரத்துடன் கத்தினாள்.

துவண்டு கீழே கிடந்த பேத்தியை வாரித் தன் புடவைத் தலைப்பால் அவளது கண்ணீரைத் துடைத்த போது பங்கஜத்திற்குத் தாள முடியவில்லை.

''ஓர் ஈ எறும்பு கூடக் கடிக்கப் பொறுக்காது... இவளை நான் எப்படிப் பூப்போல வளர்த்திருக்கிறேன். உனக்கு என்ன தெரியும்? உன் வேலை தெரியும். மீதிப்பொழுதுக்குக் குடிச்சுட்டு வந்து தள்ளாடத் தெரியும். ஹாய் பேபி! அப்படின்னு கொஞ்சிட்டா குழந்தையைச் சீராக வளர்த்த தகப்பனாகிடுவியோ நீ! சாக்லெட்டும், பிஸ்கட்டும் வாங்கி வந்து குடுத்திட்டா அன்பான தந்தைங்கிற எண்ணமோ? இப்படி ஒரு பிரச்சனை உருவாகிறப்போ பொறுமையா உண்மை என்னன்னு பார்க்கிற பொறுப்பு வந்தால்தான் நீ உண்மையிலே அவளைப் பெத்த தகப்பன்! போ! இங்கே நிக்காதே. பெண்களைத் தொட்டு அடிக்கிற சங்கதி எனக்குப் பிடிக்காதுன்னு தெரிஞ்சும். சே!...என்ன மனுஷன் நீ...'' கண்ணீரிடையே கத்தினாள்.

கைத் தாங்கலாக அஞ்சனாவை மாடி அறைக்கு அழைத்துச் சென்று படுக்கை மீது கிடத்தி...அவளது ரவிக்கையை நீக்கிவிட்டு

முதுகைப் பார்த்தபோது பங்கஜம் திடுக்கிட்டுப் போனாள். சாது போன்றிருந்த சேதுராமனுக்கு இப்படி ஒரு மிருக வெறியா? சிவப்பாக, வரிவரியாக இரத்தக்கசிவுடன் காணப்பட்ட காயத்தை கண்டு அவள் பதறினாள்.

மருந்தைப் பஞ்சிலே தோய்த்து எல்லாக் காயத்தின் மீதும் பூசிய பாட்டி, தன் கண்களில் புரண்ட கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு மெல்லக் கேட்டாள். ''அஞ்சனா! என்கிட்ட சொல்லு! யார் அவன்?''

அஞ்சனாவின் நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொண்டது. உண்மையில் அவளுக்கு அது ஒரு குழப்பமாகத்தான் இருந்தது.

கங்கா வீட்டுப் பார்ட்டியில் அவளிடம் தவறாக நடக்க முயன்ற அந்த அயோக்கியன்...கௌசிக்காக இருக்குமோ? பெரிய உயர்மட்டத்து அதிகாரியாக வேலை பார்க்கும் அவன் இப்படி ஒரு காரியம் செய்வானா?

''ஊகும்...பாட்டி எனக்குத் தெரியாது'' விசும்பி அழுதாள்.

''பரவாயில்லை!...போகட்டும்! நீ இனிமேலாவது புரிஞ்சுக்கணும். வயது வந்த பிறகு பெண்கள் எத்தனைதான் படிச்சிருந்தாலும், நாகரீக சூழ்நிலையிலே வளர்ந்திருந்தாலும், ஆண்களுடன் நெருக்கமாகப் பழகிப் பேசிச்சிரிக்கக் கூடாது? ''சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே...''ன்னு பாரதி சொன்னார். படிப்பு, அந்தஸ்து பதவி இவைகளில் ஆணுக்குப் பெண் சரிநிகர் சமமாக இருக்கத் தெரிஞ்சுக்கணும். அதுக்கு மேலே இடையே ஒரு கோட்டைப் போட்டுக் கொண்டு, அதைத் தாண்டாம, பெண் தன்னைத் தானே காத்துக்கப் புரிஞ்சுக்கணும்.''

''ஒரு ஆண்பிள்ளையோட சரிக்கு சமமா நின்னுண்டு பேசறது தப்பா பாட்டி?''



''அது தப்பில்லை...ஆனால் தன்னைத் தவறாப் புரிஞ்சிக்கிறாப்பல அவனுக்கு இடம் கொடுத்து, நெருக்கமான சிநேகித முறையிலே பழகிப் பேசறது ரொம்பத் தப்பு. இது எந்தக் காலத்துக்கும் பொருந்தும் ஒரு உண்மை.''

''அப்படி நான் யார்கிட்டேயும் நடந்து கொண்டதாக எனக்குத் தெரியலையே பாட்டி...'' விசும்பினாள் அஞ்சனா.

''சரி இதை இப்படியே மறந்துடுவோம். நீ ஏதாவது சாப்பிட்டு விட்டுத் தூங்கு...போதும்.'' சமாதானப்படுத்தினாள் பாட்டி.

சில நாட்களுக்குப்பின்-ஒருநாள் மாலை அவள் பாட்டியுடன் அண்ணாசாலை கடைக்குச் சென்றிருந்தாள். பாட்டி, வீட்டுக்குத் தேவையானதொரு மின் விசைச் சாமானை வாங்கிக்கொண்டிருந்த சமயம்...எதிர் சாரியிலிருந்த புத்தகக் கடைக்கு ஓடி ஒரு கதைப் புத்தகம் வாங்கத் துடித்தாள் பேத்தி.

''பத்திரம்... சட்டுனு வந்துரு''-பங்கஜம் உத்தரவு கொடுத்தாள்.

கடைக்குள் நுழைந்து தேவையான புத்தகத்தை விரைவில் வாங்கிக்கொண்டு கவுண்டரில் பணத்தைக் கட்டிவிட்டுப் படிகளில் இறங்கி அவள் வேகமாகத் திரும்பியபோது...''ஹாய்!'' என்ற குரல் அவளைத் திடுக்கிடச் செய்தது.

முகத்தை மறைத்த கருப்புக் கண்ணாடியைக் கழற்றிக் கையில் பிடித்துக் கொண்டு...எதிரே வந்து நின்றான் கௌசிக்.

மற்றவர்களின் கவனத்தை வீணே கவர விரும்பாது... பதிலுக்கு வேண்டா வெறுப்பாக, ''ஹாய்'' என்றாள்.

கூடவே அவன் அவளுடன் ஜோடியாக நடந்து கொண்டு பேசினான். ''உன் கல்யாணம் நின்னு போச்சுன்னு கேள்விப்பட்டேன்.''

திடுக்கிட்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள். ''இவனுக்கு எப்படித் தெரியும்?''

''ஆச்சரியமா இருக்கா? அதுக்கு மூல காரணமே இந்த அய்யா தானே? அன்னிக்கு எனக்கு ஒத்துப் போயிருந்தா நான் அடங்கிப் போயிருப்பேன், இல்லையா?''

''அயோகிய ராஸ்கல்! நீயா மொட்டைக் கடிதாசி எழுதிப் போடறே?''

''என் எண்ணம் ஈடேறுகிறவரையில் போட்டுக்கொண்டே யிருப்பேன்!''

''பயமுறுத்திறியா? நான் என் அப்பாகிட்டே சொல்லி உன்னைப் போலீசில் பிடிச்சுக் கொடுத்து என்ன பண்றேன் பார்?'' பதிலுக்கு அவள் கோபத்துடன் சீறினாள்.

''விஷயம் வெளியே தெரிஞ்சா உனக்குத் தானே கேவலம். கங்கா வீட்டுப் பார்ட்டியிலே முதல் முதலா நாம நெருங்கிப் பழகினோம்னு நான் சொல்ல ஆரம்பிச்சுடுவேன். அப்ப என்ன செய்வே?''

நெஞ்சு படபடக்க, கையும் காலும் பயத்தில் உதற அவள் நடக்க முடியாது தள்ளாடிப் போனாள். இப்பொழுது அவள் எப்படி அவனைச் சமாளிப்பது? கொஞ்ச தூரத்தில் பாட்டி பங்கஜம் தன்னை நோக்கி வருவதைக் கண்டதும் திடீரென்று ஏற்பட்ட துணிவில் அவனை வெறுப்புடன் உற்றுப் பார்த்துவிட்டுக் கோபத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு வேகமாக நடந்து விட்டாள்.

அவள் அறிந்து கொண்ட அந்த உண்மையை அவள் பாட்டியிடம் சொல்லப் பயந்தாள். அப்பாவிடம் அடி வாங்கிய நாளிலிருந்து அவள்...சற்று ஒதுங்கியே வாழத் தலைப் பட்டிருந்தாள். தீர விசாரியாமல் தன்னை அவசரப்பட்டு முரட்டுத்



தனமாக அடித்ததை அவள் சட்டென்று மறந்து விடவில்லை. அடிமனதிலே அப்பாவின் மேல் கோபம் கண்ணில் விழுந்த மணலாக உறுத்திக் கொண்டிருந்தது. அவரிடம் போய் என்ன உதவியைக் கேட்பது?

கவலையும் திகிலுமாக...அவள் தனக்குள்ளே மருகிக் கொண்டிருந்தாள்.

## 4

பாட்டி பங்கஜத்தின் சிநேகிதியின் தயவால் கிடைத்த வரன்தான் இராஜசேகரன். பையன் பார்க்க மாநிறமாக இருந்தபோதிலும்... சாதாரணக்குடும்பத்தைச் சேர்ந்தவன் என்றாலும்... அவனது பெயரின் பின்னால் பட்டங்கள் வால் போல் நீண்டிருந்தன என்ற காரணம் பற்றியும் ஒரு பெரிய நிறுவனத்தின் விற்பனைப் பகுதியிலே உயர் மட்டத்து அதிகாரியாக உத்தியோகம் செய்கிறான் என்கிற தகுதிக்கும் பங்கஜத்திற்கு அவனை மிகவும் பிடித்து விட்டிருந்தது.

தன் விதவைத் தாய், கல்யாணமாகிப் புக்ககத்தில் வாழ்ந்த தங்கை, தன் அண்ணன்-அண்ணி என்றதொரு படையுடன் அவன் பெண் பார்க்க வந்திருந்தான்.

பாட்டி பங்கஜம் அலுத்துக் கொள்ளாது வந்தவர்களுக்கு ரவா சொஜ்சியும் பஜ்ஜியும் பரிமாறிக் காப்பி கொடுத்து உபசரித்தாள். பார்க்க வந்த மாப்பிள்ளை வீட்டவர்களுக்காக... அலங்கரித்துக் கொண்டு பொம்மையாக அவர்கள் முன் வந்து நின்று வணங்கி, பின்னர் கல்யாணம் கூடவில்லை என்ற அதிர்ச்சியை அடி மேல் அடியாக வாங்கி, நெஞ்சு நொறுங்கி விட்டிருந்த அஞ்சனாவுக்கு அவனுக்காகத் தனிப்பட்ட அலங்காரம் செய்து கொள்ள விருப்பம் இருக்கவில்லை.

பாட்டி கண்களால் விழித்து உத்தரவிட்டதை மறுக்க முடியாது வேண்டா வெறுப்பாக-பீரோவிலிருந்து மல்மல் சேலையொன்றை எடுத்துக் கட்டிக் கொண்டாள். தலை முடியை வாரி அலட்சியமாகச் சுற்றி கொண்டை போட்டுக் கொண்டு, நெற்றியில் குங்குமப் பொட்டுடன், அதிகமான ஒப்பனை ஏதுமின்றி எளிய தோற்றத்திலே மாடியினின்று இறங்கி வந்தாள்.

இராஜசேகரன் அவளை வியப்புடன் பார்த்தான். அவளது வருங்கால மாமியார் நாத்தனார் எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி புன்னகையாகத் தெரிந்தது.

''நான் கொஞ்சம் பெண்ணோடு தனியே பேச விரும்புகிறேன்'' சொல்லிவிட்டுச் சேதுராமனைப் பார்த்தான் மாப்பிள்ளை பையன்.

ஆறாவது தடவையான அவர் பங்கு கொள்ளும் நாடகம் அது. வெறுப்பிலே அவர் சுருங்கிப் போயிருந்தார். 'உங்க இஷ்டம்' என்று பட்டும் படாமலும் பதிலளித்தார்.

''தோட்டத்து புல்வெளியிலே நாற்காலிகளைப் போடச் சொல்றேன். நீங்க கேட்க விரும்பியதை, எங்க கண்முன்னே காது படாத தூரத்திலே கேட்டுக்கலாம்.'' பங்கஜம் வேடிக்கையாகப் பேச முயன்றாள். தொடர்ந்து சில காலமாக நடந்த பெண் பார்க்கும் படலத்திற்குப் பின்னர் ஏற்பட்ட அதிர்ச்சியால் அஞ்சனா குழந்தைத் தனத்திலிருந்து சிறிது வளர்ந்து விட்டிருந்தாள். நாற்காலியில் வந்து அவன் முன்னாலேயே உட்கார்ந்து அவனை அலட்சியமாக நிமிர்ந்து பார்த்தாள்.

இராஜசேகரன் வாயைத் திறக்குமுன் அவளே பேசத் தொடங்கினாள். ''உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்குன்னு சொல்லப் போறீங்க இல்லையா?'' கேட்டாள்.

''ஆமாம்! உனக்கு என்னைப் பிடிச்சிருக்கான்னு கேட்டுத் தெரிஞ்சு கொண்டுதானே மேலே கேள்விகளைத் தொடர முடியும்.''



''அதற்கு முன்னாடி நான் ஒண்ணு சொல்லிவிட விரும்பறேன். இதுக்கு முந்தி என்னைப் பார்த்துப் பெண் பேசி முடிக்க ஐந்து வீட்டிலிருந்து பெரியவங்க வந்திருக்காங்க. அதைப் பத்தி உங்களுக்குத் தெரியுமா?'' இராஜசேகரன் அவளை மௌனமாகப் பார்த்தான்.

''முதல் தடவை... எல்லாம் சரின்னு சொல்லிட்டு நிச்சயம் நடக்குமுன் மாப்பிள்ளை வீட்டவங்க... திடீர்னு ஒதுங்கிட்டாங்க... காரணம் ஒரு மொட்டைக் கடிதம். அதற்குப் பிறகு... தொடர்ந்து வந்தவங்க எல்லோரும் வேறு வேறு பல காரணங்கள் சொல்லி நகர்ந்து கொண்ட போதிலும் கல்யாணம் நடக்காது தவறிப் போனதுக்கு அவர்களுக்கு வந்த அந்த அனாமதேயக் கடிதந்தான் முக்கிய காரணம். இப்போ நீங்க சரின்னு ஒத்துக்கிட்டு நிச்சயத்துக்கு நாள் வச்சீங்கன்னா, உங்களுக்கு ஒரு கடிதம் வரும். அதனாலே...'' அவள் உணர்ச்சி வசத்தால் மேலே பேச முடியாது திணறினாள்.

இராஜசேகரன் உரக்கச் சிரித்தான். ''பூ! இதுதானா சங்கதி - நான் என்னவோ ஏதோன்னு நினைச்சு ஒரு நிமிஷம் அசந்துட்டேன். அந்தக் கடிதம் வரட்டும்! கிழிச்சுத் தூரப் போட்டுடறேன், அதுக்கும் என் தீர்மானத்துக்கும் சம்பந்தமே இல்லை. எனக்கு உன்னைப் பார்த்ததுமே ரொம்பப் பிடிச்சுப் போச்சு. இப்ப நீ மனம் விட்டுப் பேசினதைக் கேட்டதும் ரொம்பவே பிடிச்சிப் போச்சு. உனக்கு என்னைப் பிடிச்சா... நிச்சயத்தைச் சீக்கிரம் வச்சுக்கலாம்'' என்றான்.

முதன் முதலாக முரளியைப் பார்த்தபோது ஏற்பட்ட அந்த ஆவேசமான பரபரப்பு அஞ்சனாவுக்கு இப்போது ஏற்படவில்லை. ஆனாலும் அவளுக்கு இராஜசேகரின் மீது மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டன.

''என்ன என் கேள்விக்குப் பதில் இல்லையா?'' வேடிக்கையாகச் சிரித்தபடி எழுந்தான் அவன்.

''எனக்கும் உங்களைப் பிடிக்கிறது'' மெல்லிய குரலில் பதில் அளித்தாள் அஞ்சனா.

கல்யாணத்திற்குச் சில தினங்களுக்கு முன்னர் அவள் இராஜசேகரனுடன் புடவைக் கடைக்குக் கிளம்பியிருந்தாள். பங்கஜம்தான் பெரிய மனது பண்ணி அவர்கள் இருவரையும் காரில் தனியே கடைக்கு அனுப்பிவிட்டிருந்தாள்.

ஜவுளியை எடுத்து முடித்துக்கொண்டு அருகிலிருந்த ஹோட்டலுக்குக் காப்பி சாப்பிட அவளை இராஜசேகரன் அழைத்துக்கொண்டு சென்றிருந்தான். ''ஹாய்'' என்ற குரலைக் கேட்டதும்... அவள் திரும்பிப் பார்த்தாள். கருப்புக் கண்ணாடியைக் கையில் பிடித்துக் கொண்டு உள்ளே நுழைந்த கௌசிக் அவர்கள் அமர்ந்திருந்த மேஜையருகே வந்து நின்றான்.

தாடை இறுக அவனை வெறித்துப் பார்த்தாள் அஞ்சனா!

''ராஜ்!... இவர் தான் மிஸ்டர் கௌசிக்... என் தோழி கங்காவுக்குத் தூரத்து உறவு. முந்தாநாள் உங்களுக்கு வந்த மொட்டைக் கடிதாசியின் ஆசிரியர் இவர். இதற்கு முன் ஐந்து தடவை எழுதிய பழக்கத்திலே ஆழந்தெரியாம காலை வச்சிருக்கார்.'' படபடவென்று கூறிவிட்டு ''மிஸ்டர் கௌசிக்! எனது வருங்காலக் கணவர் இராஜசேகரனுக்கு உங்களைப் பற்றி ரொம்பவே தெரியும். எல்லாம் சொல்லியிருக்கேன். மீதியிருந்தா நீங்க தாராளமாகச் சொல்லலாம்'' என்றாள்.

''ஒரு சமயம், மிஸ்டர் கௌசிக் அவைகளைத் தாமே போலீஸ் அதிகாரியிடம் சொல்ல விரும்புவாரோ என்னவோ? உங்க சௌகரியம் எப்படி?'' இராஜசேகர் ஏளனமாகக் கேட்டுக் கொண்டு திரும்புமுன் கௌசிக் அங்கிருந்து மாயமானான்.

முதன் முதலாகத் தன் திகில், பயம், வேதனை, அவமானம் எல்லாவற்றையும் மறந்து அஞ்சனா அவனுடன் சேர்ந்து கொண்டு குலுங்கக் குலுங்கச் சிரித்தாள்.



கல்யாணம் விமரிசையாக நடந்தேறியது. முதலில் வந்து தன் பேத்தியை ஒதுக்கியவனுக்குத் திருமணமாகு முன் அஞ்சனாவை ஒரு நல்ல இடத்திலே பிடித்துக் கொடுத்து விட்டதைப் பற்றி பரம திருப்தி பாட்டிக்கு.

இராஜசேகர் வேலை பார்த்த நிறுவனம் கார், வசிக்க வீட்டுக்கு வாடகை என்று, சலுகைகளைத் தந்து உதவியதால், பாட்டிக்கு ஒரு குடியிருப்புப் பகுதியில் தனது சிநேகிதிகள் மூலம்... ஒரு சிறு தனி வீட்டை வாடகைக்குப் பேசியிருந்தாள். அப்பாடா என்ற நிம்மதியில் அஞ்சனாவின் தந்தை மகளுக்கு வேண்டிய சீர் வரிசைகளை ஜமாய்த்து விட்டார். வீட்டுக்குத் தேவையான கட்டில், மெத்தை, இரும்பு பீரோ, எவர்சில்வர் பாத்திரம், சோபா, நாற்காலி, சாப்பாட்டறை மேஜை என்று குறை ஒன்றுமில்லாது வீட்டை அலங்கரித்து விட்டார். மெருகு போட்டுத் தயாராக வைத்திருந்த, வெள்ளிப்பாத்திரங்கள் எல்லாவற்றையும் பேத்தியிடம் ஒப்படைத்த பாட்டி வண்ண வண்ணத் திரைச்சீலைத் துணிகளை வாங்கித் தைக்கச் செய்து, தானே ஆளுடன் வந்து ஜன்னல்களுக்கு மாட்டி வீட்டை அழகுபடுத்தினாள்.

அஞ்சனாவும் இராஜசேகரனும், அவனது விதவைத் தாயும் அங்கே வந்து குடியேறுவதற்குள் - வீடு சகல வசதிகளுடனும் திகழ்ந்தது. தோட்டத்தைக் கொத்திப் பூச்செடிகளை நட்டு குரோட்டன்ஸ் செடிகளை வரிசையாகச் சட்டிகளில் கொண்டு வந்து சுவர் ஓரமாக வைத்து ஓரளவுக்குப் பசுமையான தொரு சூழ்நிலையை உருவாக்கிவிட்டிருந்தாள் பாட்டி.

தன் ஒரே பேத்தி... கண்ணின் கருமணிக்கு ஒப்பான அஞ்சனா, தன் அன்புக் கணவனுடன் எந்தவிதக் குறைவுமின்றி ஒன்றாக நாலு பேர் முன் வாழ்ந்து காட்ட வேண்டு மென்றே ஆதங்கம் அவளுக்கு. பணத்தைத் தண்ணீராகவே ஓட விட்டாள்.

ஒரு நல்ல நாளில் இராஜசேகரன் தன் புதுமனைவியுடன் புதுமனை புகுந்தான். அவர்களுக்கு உதவி செய்யப் பங்கஜமும் சேதுராமனும் காலையிலேயே அங்கு போய் சேர்ந்து விட்டிருந்தனர். மாலை வீட்டில் ஒரு பெரிய விருந்து. இராஜசேகரனுக்கு அலுவலக நண்பர்கள், கல்லூரி காலத்துத் தோழர்கள், தெரிந்தவர்கள், அறிந்தவர்கள், உறவினர்கள் என்று ஒரு பெரும் படையே இருந்தது. அதில் பெரும்பாலானவர்கள் அவனை ஒத்த இளைஞர்கள். புதுமனை புகுந்த நாள் அன்று மாலை வீடு திமுதிமுத்தது. சாப்பாட்டிற்குப் பின்னர் முன்னறையில் இரவு பத்து மணிக்கு மேலும் பாப் சங்கீதம் அலறியது. சிகரெட் புகைமண்டலமாகி வீட்டை நிறைத்துக் கொண்டது. பேச்சும் சிரிப்புமாக விருந்து ஓயாது போலத் தொடர்ந்து கொண்டிருப் பதைக் காணப் பங்கஜத்திற்குக் கலவரமாகத் தானிருந்தது.

''என் மனைவி அஞ்சனா!'' என்று வந்த வாலிபத் தோழர்களிடம் அவளை இராஜசேகரன் பெருமையாக அறிமுகம் செய்து கொண்டிருந்ததைக் கவனித்து முகம் சுருங்கிப் போனாள் பாட்டி. சம்பந்தியம்மாளிடம் எச்சரிக்கை செய்வோம் என்று உள்ளே போனாள்.

''ராஜீவுக்கு ரொம்ப சிநேகிதர்கள். சின்ன வயசிலிருந்தே உசிருக்கு உசிராப் பழகினவங்க ஏராளம்'' என்று தாராளமான மனதுடன் தன் மகனின் பிரதாபத்தை அளந்து கொண்டிருந்தாள் சம்பந்தி ஞானம்.

பெயர் தான் ஞானம், மூளையில் அது துளியளவும் இல்லைபோலும். ஆத்திரத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டாள் பாட்டி. ''இந்தப் பெண் அஞ்சனா, இன்னும் புரிந்து கொள்ளமாட்டேன் என்கிறாளே'' என்று ஆதங்கப்பட்டாள்.

மேகப்படலம் போன்ற மெல்லிய ஷிபானில் தோள் பட்டையினின்று புடவை நழுவுவது கூடத் தெரியாது, வாலிபன் ஒருவனுடன் பற்களைக் காட்டிச் சிரித்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்த பேத்தியைக் கண்டதும் அவளுக்குக் கோபம் கட்டுக் கொள்ளவில்லை.



''அஞ்சனா! இங்கே வா!'' என்று அவளை அவசரமாகக் கூப்பிட்டாள். படுக்கையறைக்குள்ளே தள்ளிக் கொண்டு கதவைச் சாத்திக் கொண்டாள். ''இனிமே நீதான் பொறுப்பான மனைவியா நடந்துகொள்ளப் புரிஞ்சிக்கணும். பல தடவை படிச்சுப் படிச்சுப் சொன்ன கதைதான். உன் கணவனுக்கு ஆயிரம் தோழர்கள் இருக்கலாம். ஆனால் நீ உன் எல்லைக் கோட்டை விட்டுத் தாண்டக் கூடாது. பத்திரம்.''

அஞ்சனாவுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. இந்தப் பாட்டிக்கு இனி என்ன அதிகாரம் இருக்கு? அவள் இப்போது இராஜசேகரின் மனைவி... அவர் சொற்படி நடக்கக் கடமைப் பட்டவள். நண்பர்களுடன் குஷியாகப் பேசும்... குழந்தை சுபாவம் அவருக்கு. இந்தப் பாட்டிக்குத் தன்னைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் தவறா நடக்கிறது போல ஏன் இந்தக் கோணல் பார்வை?

''இப்ப என்ன நடந்துவிட்டது, இப்படி நீங்க மனைதை அலட்டிக்கிறீங்க? இன்னமும் நான் பச்சைக் குழந்தையா? எப்படி நடந்துக்கிறதுன்னு எனக்குத் தெரியாதா? கல்யாணமாகாதபோது, கண்டவர்களிடம் பேசினால் தப்புன்னு சொன்னீங்க. ஒத்துக்கிறேன். இப்போ எனக்குக் கல்யாணமாகிவிட்டதே...'' அஞ்சனா சிடுசிடுத்தாள்.

''தாலி மட்டும் ஒரு பெண்ணுக்கு வேலியில்லை, தெரிஞ்சுக்கோ. உன் கணவனுடைய சிநேகிதர்களைக் கொஞ்சம் மதிப்பும், மரியாதையுமாகத் தூரத்தில் வச்சு நடத்தக் கத்துக்கோ. அவ்வளவுதான் சொல்லத் தெரியும்'' என்றாள் பாட்டி ஆவேசமாக.

'கிடக்கிறாங்க பாட்டி. இன்னமும் அதே பழைய பல்லவி. பண்புகள். பட்டிக்காட்டுத் தனமான கொள்கைகள். அருந்ததி காலத்திலே வாழவேண்டியவங்க. தப்பித் தவறி இந்தக் காலத்திலே பிறந்து இப்படி அவள் வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் புகுந்து...சே! சே...!' அவளுக்குக் கோபமாக வந்தது.

அவளும் இராஜசேகரனும் இனிமையாக, புதுமையாக, புரட்சிகரமாகக் காலத்தை ஒட்டி வாழப்போகிறார்கள். பாட்டியின் குறுக்கீட்டிற்கு இனி வழி வைக்கப் போவதில்லை. பாட்டி அடிக்கடி ஆலோசனை சொல்ல ஆரம்பித்தால் பிறந்த வீட்டுப் பக்கம் போவதையே நிறுத்திக் கொண்டு விட வேண்டும். அப்பத்தான் பாட்டிக்குப் புத்தி வரும். தன்னுள் பல பல எண்ணிப் பொங்கி எழுந்தாள் பேத்தி.

செல்வத்தின் சுகத்திலே, கவலையே தெரியாது வளர்க்கப் பட்டவள் அஞ்சனா. பணத்தின் அருமையே தெரியாத ஒரு சுபாவம். அடிமட்ட நிலையிலிருந்து முன்னுக்கு வந்தவன் இராஜசேகரன். தான் இதுவரை காணாத பல சுகானுபவங்களை, ஒரேயடியாக அனுபவித்துத் தீர்க்க வேண்டுமென்ற ஆத்திரமான ஆவல் அவனுக்கு. அவைகளைத் தேடிக்கொள்ளப் பணத்தை வாரி இறைக்க அவன் சளைக்க வில்லை. மனைவி, ஊதாரிக் கணவன் இருவரும் ஒன்று சேர்ந்து விட்டால் கேட்கவா வேண்டும்?

அதுவும் தாங்கள் இளைஞர்கள்; வருங்காலச் சமுதாயத்தை அமைக்கப் போகும் சிந்தனைச் சிற்பிகள். புதிய கருத்துக்கள், புதிய கொள்கைள் கொண்டவர்கள், சமூகத்தைப் புதிய கண்ணோட்டத்திலே பார்க்கத் தெரிந்த பரந்த மனம் படைத்தவர்கள் என்ற கருத்தில் தீவிரமாக ஊறிப்போயிருந்தனர். புதியதோர் உலகம் செய்வோம் என்ற கனவில்... இருவரும் மிதக்கத் தொடங்கினர்.



வாரத்திற்கு இருமுறை இராஜசேகரன் வீட்டில் நண்பர்கள் விருந்துச் சாப்பாடும் கூப்பாடுமாகப் பல இரவுகள் கழிந்தன. புதிய இனிமையில் நாட்கள் விரைந்தன.

இராஜசேகரனுக்கு சிகரெட், மது இவைகளில் பிடித்தம் கிடையாது. ஆனால் நண்பர்களுக்காக இந்தப் பொருள்களை வீட்டில் வாங்கி வைக்க வேண்டியிருந்தது. அவைகளுக்குப் பணம் ஏராளமாகச் செலவாயின. பைத்தியக்காரனைச் சுற்றிப் பத்துப் பேர் என்பது போலப் பணத்தை வாரி இறைக்கத் துணிந்த அவனைச் சுற்றி, சதா பல நண்பர்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

எப்பொழுதும் அவர்களது வீட்டில் நண்பர்களின் நடமாட்டம் சகஜமான சங்கதியாகிவிட்டிருந்தது. பாட்டி பங்கஜத்தின் காதுகளுக்குச் சங்கதி எட்டியதும் அவளால் மௌனமாக இருக்க முடியவில்லை. பதை பதைக்கும் வெயிலில் ஒரு நாள் பகல் பஸ்ஸைப் பிடித்துக்கொண்டு நேரே பேத்தி வீட்டுக்கு வந்துவிட்டாள். சில நாட்களாகப் பேத்தி தொலை பேசியில் கூடக் கூப்பிட்டுத் தன்னை நலன் விசாரிப்பதில்லை என்ற வருத்தம் மனதை உறுத்தியபோதும், பாட்டி இது சமயம் மனத்தாங்கலை உதறிவிட்டுச் செயல்பட வேண்டுமென்றுதான் வந்திருந்தாள்.

அஞ்சனா வீட்டின் முன்னறையில் யாரோ ஒரு தொங்கு மீசை வாலிபனுடன் பேசிச் சிரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். மாமியார் ஞானம் அடுப்பருகே சாப்பாடு தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள். இராஜசேகரன் இன்னமும் வீட்டிற்குப் பகல் உணவுக்கு வர வில்லை. பாட்டியைக் கண்டதும் அஞ்சனாவின் முகம் சுருங்கிப் போனது.

''இவர் என் கணவரின் உயிர்த் தோழர். பம்பாய் பிராஞ்சில் வேலை பார்க்கிறார். இரகுநந்தன்னு பேர். சென்னையில் ஒரு காரியமா வந்திருக்கிறார். இங்கே வந்தால் எப்பவும் என்

கணவரோடத்தான் தூங்குகிற பழக்கமாம்...'' பாட்டி பங்கஜத்தின் முகம் ஜிவ் என்று சூடாகியது.

''அப்படியா? உங்களைத் சந்தித்தது பற்றி சந்தோஷம். நான் அஞ்சலியின் பாட்டி...'' என்று அறிமுகப் படலத்தை அடுக்கிக் கொண்டு வேகமாகச் சமையலறைக்குள் புகுந்தாள்.

''வாங்கோ! உட்காருங்கோ...'' என்று உபசரித்த சம்பந்தி அம்மாளின் கண்கள் சிவந்திருந்தன.

''இதென்ன கூத்து... மாமியிருக்கும், மருமகளுக்கும் ஏதாவது சண்டையா? அடுப்படியில் கிழவி அனல் அருகே வெந்து கொண்டு உணவு தயாரிக்கணும். மருமகள் முன்னறை சோபாவில் சொகுசாகச் சாய்ந்து கொண்டு கண்டவனுடன் கதை பேசிக் கொண்டு உட்கார்ந்திருக்கணுமா? இது எந்த நியாயத்தில் சேர்த்தி?'' கோபத்திலே பொங்கிப் போனாள் பங்கஜம்.

''உட்காருங்கள்!'' என்று ஞானம் ஒரு பிரம்பு மோடாவை இழுத்துப் போட்டாள். குழம்பைக் கிளறிக் கொண்டே பரிதாபமாகப் பங்கஜத்தைப் பார்த்தாள்.

''நீங்க வந்தது நல்லதாப் போச்சு நானே உங்களுக்கு ஒரு கடிதாசியாவது எழுதிப் போடணும்னு நினைச்சேன்.''

''ஏன் டெலிபோனில் கூப்பிட்டுப் பேசியிருக்கலாமே...''

''டெலிபோன் பிளக்கை அவங்க படுக்கை அறையிலே கொண்டு வச்சுக் கொள்வதினாலே என்னாலே அதை உபயோகிக்க முடியலை.''

திடீர்னு ஞானம் - கண்கள் கலங்கிப் பொலபொலவென்று கண்ணீரை வழிய விட்டாள்.

''நான் ரொம்பப் படிச்சவ இல்லே. என் குழந்தைகளை முன்னுக்குக் கொண்டு வர ரொம்ப உடம்பால பாடுபட்டவ. அதனாலேயே என்னவோ மனசு ரொம்ப வேதனைப் படறது...''



''விவரமாச் சொல்லுங்க. விஷயம் என்னன்னு தெரிஞ்சா என்னால ஆன உதவி செய்யத் தயார்.'' பங்கஜம் உற்சாகமாகப் பேசினாள். குழம்பை இறக்கி வைத்துவிட்டு அடுப்பை அணைத்தாள் ஞானம்.

''ரொம்பக் காலமா நான் மூத்த பிள்ளையோட திருநெல்வேலியிலேயே இருந்துக்கிட்டிருந்தேன். இராஜன் தனியாத்தான் இருக்கிற பழக்கம். என்னமோ சின்னவனுக்குக் கல்யாணமாகிக் குடித்தனம் வச்சிருக்காங்களே, கூட இருந்து உதவுவோம்னு நல்ல எண்ணத்தோட வந்தேன்.'' கண்களில் வழிந்த நீரைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

''இப்ப என்ன ஆச்சு? நீங்க செய்த காரியம் ரொம்ப நல்லது. ஏன் வருத்தப்படுகிறீங்க...''

''இங்கே வந்தது தப்புன்னு புரிஞ்சுபோச்சு. நேத்து ராத்திரி ராஜன் சொல்லாலே பலவிதமா சொல்லிவிட்டான். உங்க பேத்தி ஆதரவா ஒரு வார்த்தை கூட இடையே சொல்லலை. வேடிக்கை பார்த்துண்டு நின்னா! அவளுக்கும் நான் இங்கே இருக்கிறது சம்மதமில்லை போல இருக்கு. இளசுங்க நடுவே வயசானவங்க இருந்தா அவங்களுக்குப் பிடிக்காதுதான்...' மூக்கை உறிஞ்சினாள் ஞானம்.

''யார் அப்படிச் சொன்னது?'' காரமாக, கோபமாகக் கேட்டாள் பங்கஜம்.

''கண்ட சினேகிதர்களையெல்லாம் வீட்டுக்கு அழைச்சிட்டு வர்றே. அவங்க தங்கறதுக்கு என் அறையைக் காலி பண்ணித் தங்கச் சொல்றே? வீட்டிலே தனியா அழகா ஒரு பெண்ஜாதி இருக்கும்போது கண்ட தடியன்களை சிநேகிதம்னு அதிகம் அழைச்சுக் கொண்டாடாதே. ஆபத்திலே வந்து முடியும்னு சொன்னேன். அவ்வளவுதான். என் மகன் எகிறிக் குதிச்சான். அவங்களைப் புரிஞ்சுக்கத் தெரியாத பட்டிக்காடுன்னு ஏசிட்டான்.

இனி நான் இங்கே இருப்பது மரியாதை இல்லை. அதனாலே பக்கத்து வீட்டுப் பையனிடம் டிக்கெட் வாங்கித்தர ஏற்பாடு செஞ்சுட்டேன். இன்னிக்கோ நாளைக்கோ எப்ப டிக்கெட் கிடைச்சாலும் கிளம்பிடறதன்னு தீர்மானம்.''

அவள் குரல் துயரத்தில் உடைந்தது. பாட்டி பங்கஜத்திற்கு அதற்குமேல் கேட்டுக்கொண்டு சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை.

''அஞ்சனா!...'' ஓங்கிக் குரல் கொடுத்து முன்னறையில் உட்கார்ந்திருந்தவளை அழைத்தாள்.

''மாமியார் சமையலலையில் திண்டாடிக்கிட்டிருக்கும் போது அங்கே அவனோட உனக்கென்ன பேச்சு வந்திருக்கு?''

''பாட்டி இது என் வீடு. இங்கே நடக்கிறதைப் பத்திக் குறுக்குக் கேள்வி கேட்டு என்னை அதட்டி மிரட்டி அடக்க உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது.''

''என்ன சொன்னே?'' பங்கஜம் ஆத்திரத்திலே கத்தினாள்.

''இந்தக் கத்தல், கூச்சல் எல்லாம் உங்க வீட்டிலே வச்சுக்கோங்க பாட்டி! இரகுநந்தன் என் கணவரின் நண்பர். அவரை உபசரித்து, கவனித்துக் கொள்வது என் கடமை. ஒரு பெண் பேசினால் கற்புப் போயிடும்னு நினைக்கிற பத்தாம் பசலித்தனத்தை மூட்டை கட்டி வச்சாச்சு இங்கே.''

''அஞ்சனா! என்ன சொல்றே?'' வியப்பும் அதிர்ச்சியுமாகக் கேட்ட பாட்டி பேத்தியின் முகத்தைப் பார்த்தாள்.

''உங்களது குறுக்கீடு என் வீட்டில் செல்லாது. ஏதோ பாட்டின்னு மரியாதையைப் பெற்றுக்கொண்டு வந்துண்டு போயிட்டு இருந்தா இருங்க... இல்லாட்டா''... சம்பந்தியம் மாளைப் பாட்டி திரும்பிப் பார்த்தாள்.



''நான் சொன்னதெல்லாம் உண்மைன்னு நிருபிச்சுட்டா பார்த்தீங்களா-?'' என்று சொல்லாமல் சொல்லியது அவளது கண்கள்.

''அப்போ நான் வரேன்'' சம்பந்தியம்மாளிடம் மட்டும் சொல்லிக்கொண்டு, பங்கஜம் அதற்குமேல் ஒரு கணம்கூடத் தாமதிக்காது விருவிருவென்று தெருவில் நடந்தாள். மண்டையைப் பிளந்த வெய்யிலைக்கூட அவள் அதிகம் உணரவில்லை. பச்சைக் குழந்தையிலிருந்து பாடுபட்டு எடுத்து வளர்த்து ஆளாக்கி, ஒருவன் கையில் ஒப்படைத்ததற்கு அஞ்சனா காட்டிய அசட்டையும், உதாசீனமும் அப்பப்பா நெருப்பாக அவளை எரித்தன.

அடுத்த நாள் இரகுநந்தன் பம்பாய்க்குப் புறப்பட்டுப் போய் விட்டான். அதற்கு அடுத்த நாள் மாமியார் ஞானம் திருநெல்வேலிக்குத் தன் மூத்த மகன் வீட்டுக்குக் கிளம்பி போனாள்.

தொலையட்டும்.. என்றுதான் அஞ்சனா எண்ணிக் கொண்டாள். இனி அவர்களது சுதந்திர வாழ்க்கைக்குள் இடையூறுகள் ஏதுமே இருக்காது. பாட்டியும் கோபித்துக்கொண்டு போனது நல்லதாகவே போய்விட்டது. இல்லாவிடில் தொலைபேசி மூலமாவது ஏதாவது கேட்டுத் தொல்லை கொடுப்பாள். இப்போது..... அவர்களது இனிய வாழ்க்கையில் எத்தனை நிம்மதி? எத்தனை சுதந்திரம்?

சில மாதங்களுக்குப் பின், ஒரு நாள் மாலை அவள் கணவன் அலுவலகத்திலிருந்து போன் செய்தான்.

அவசரமாக அவன் டைரக்டருடன் டெல்லிக்குப் போக வேண்டியிருப்பதால் அவனது சிறு பெட்டிக்குள் இரண்டு நாளைக்குத் தேவையான உடைகளை அவள் எடுத்து வைக்க வேண்டும் என்று.

திருமணமாகிப் பல மாதங்களாகி விட்டிருந்தும் அவர்கள் இருவரும் ஒரு நாள் கூடப் பிரிந்து இருந்ததில்லை. இரண்டு நாள் அவன் ஊரில் இருக்க மாட்டான் - அவள் தனியே வீட்டில் தங்கியிருக்க வேண்டும்.

திடீரென்று அவளுக்கு அந்தத் தனிமை அச்சுறுத்தியது,

டாக்ஸியை வரவழைத்துப் புறப்படு முன் அவன் கேட்டான், ''ஏன் பயப்படறே? தனியாக இருக்கக் கஷ்டமாயிருந்தா உன் பிறந்த வீட்டுக்குப் போன் பண்ணிக் காரை வரவழைத்து, போய் ரெண்டு நாள் இருந்துவிட்டு வாயேன்.''

பாட்டியுடன் தனக்கு மனத்தாங்கல் என்ற சங்கதியை அவள் கணவனிடம் மூச்சு விடவில்லை.

''ஒண்ணுமில்லை. கதவைப் பூட்டிக் கொண்டு படுத்துக் கொண்டால் என்ன பயம்? ரெண்டுநாள் ரெண்டு நிமிஷமாகப் போய்விடாதா?'' தைரியமாகப் பேசினாள்.

அன்று காலை, மாலை இரண்டு நேரமும் எப்படியோ வேலையில் மறைந்தன. இருட்டும் சமயம் வேலைக்காரியும் விடைபெற்றுக் கொண்டு போனதும் அவள் அச்சத்துடன் கதவைச் சாத்தித் தாளிட்டுக்கொண்டு உள்ளே வந்து உட்கார்ந்தாள்.

தைரியமாகத்தான் பேசிக் கணவனை ஊருக்கு அனுப்பினாள். ஆனால் தனியே இருந்து பழக்கமில்லாததால்... இலையசையும் சத்தம்கூட அவள் இருதயத் துடிப்பை நடுக்கத்திலே அதிகரிக்கச் செய்தது.

வாயில் அழைப்புமணி அழுத்தமாக ஒலித்ததைக் கேட்டு அதிர்ந்துபோய் அவள் கதவில் பதித்திருந்த கண்ணாடிக் கண் வழியே பார்த்தாள். வராந்தாவில் கையில் ஃப்ப்கேசுடன்... அவளது கணவனின் நண்பன் இரகுநந்தன் நின்று கொண்டிருந்தான்.



இந்தச் சமயம்... அவனை உள்ளே அழைப்பதா?... தயங்கி யோசிக்கு முன் மறுபடி அவன் அவசரமாக அழைப்பு மணியை அழுத்தினான்.

வேறு வழியில்லாது அவள் கதவைத் திறந்தாள். ''ஹாய் அஞ்சனா'' என்று மகிழ்ச்சியுடன் கூவிக்கொண்டு உள்ளே வந்தவன் சுற்றும் முற்றும் பார்த்தான்.

''அவர் ஊரில் இல்லை''... என்று விழுங்கினாள் அஞ்சனா.

''அதனால் என்ன-? எனக்கு இந்த வீட்டில் தங்க எப்போதும் உரிமை உண்டே-'' என்று சொல்லிக்கொண்டே அவன் அடுத்ததாக இருந்த அறைக்குள் சென்று சுவாதினமாகத் தன் பெட்டியை வைத்துவிட்டு... வெளியில் வந்தான்.

குளியலறைக்குள் சென்று குளித்தான். இரவு உடைகளை அணிந்து கொண்டு தன் சொந்த வீட்டில் வளைய வருவது போல அவள் அருகில் இடித்துக்கொண்டு வந்து நின்று, ''என்ன சமைச்சிருக்கே. பசியா இருக்கு... தட்டை எடுத்துவை'' கணவனைப் போல அதட்டினான்.

அஞ்சனாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ஊரில் இல்லை என்று சொல்லியும்... இங்கிதம் தெரியாமல்... என்ன மனிதன்? உதட்டைக் கடித்துக்கொண்டு அவள் சமையலறைக்குள் சென்று இரவு சாப்பாட்டுக்குத் தனக்காக வைத்திருந்த சுக்கா ரொட்டிகளையும், சப்ஜியையும் எடுத்து வந்து பறிமாறினாள்.

என்னதான் சிநேகிதன் என்றாலும்... இவனை இரவில் வீட்டில் தன்னோடு தங்கும்படி அனுமதிப்பது சரியா? கலங்கிப் போனாள் அஞ்சனா. அவசரமாக ஒரு தம்பளர் மோரைக் குடித்துவிட்டு... சமையலறையை ஒழுங்கு செய்து கொண்டிருந்த போது... அவன் வாயிற்படியருகே நிற்பதைக் கண்டு... வெதறிப் போனாள்.

''என்ன வேணும்?... குடிப்பதற்குத் தண்ணீர் கொண்டு போய் அறையில் வச்சிருக்கேனே'' மெல்ல அவனை அறைக்குள் அனுப்பப் பார்த்தாள். ''குடிப்பதற்கு... நான் வேறு விஷயம் வச்சிருக்கேன்... கமான். நீயும்...வா... உட்கார்ந்து பேசிக் கொண்டே'' என்று அவன் முடிப்பதற்குள் ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது அவளுக்கு.

''மிஸ்டர் ரகுநந்தன்... எனக்கு அந்தப் பழக்கமெல்லாம் கிடையாது... அதனாலே நீங்க ஒரு காரியம் செய்யுங்க... என் கணவர் வரும்வரை... தயவுசெய்து ஒரு ஹோட்டலில் போய் தங்கிக்கோங்க... நீங்க இங்கே இருந்தா பார்க்கிறவர்களுக்கு அசிங்கமாகப்படும்'' என்றாள்.

''அடடா ரொம்ப ஒழுக்கத்தைப் பத்திப் பேசிறியே. உன் கணவன் ஊரில் இல்லேன்னு தெரிஞ்சு... நீ தனியா இருக்கேங்கிறதையும் தெரிஞ்சுதான் வந்திருக்கேன். உனக்கு என்னைப் பிடிக்கும்னு எனக்குத் தெரியும்... எனக்கு, உன் மேலே தீராத மோகம். நாம் ஏன்... புரியாதது போல நடிக்கணும்? வெளிப்படையா நமது உணர்வுகளுக்கு வடிகால் தேடிக்கிறது தானே முறை...?''

''சே! தாறுமாறாகப் பேசாதே, மரியாதையா இடத்தை விட்டுப் போயிடு. என் கணவர் சிநேகிதர்னு உன்கிட்ட மரியாதை காட்டிப் பேசினதுக்கு இதுதானா நீ காட்ற நன்றி?''

''காதலைக் காட்றேங்கிறேன். வெறும் நன்றி பன்றி இதெல்லாம் பேசிட்டுப் பொழுதை ஏன் வீணாக்கறே...! அப்படி நீ ஒண்ணும் கைபடாத ரோஜா இல்லையே...? கல்யாணமாகிறதுக்கு முந்தி... கௌசிக்கோட காதலி, இப்போ ஒரு நாளைக்கு, கல்யாணமான பிறகு என் காதலியாக இருந்தா உன் மதிப்பு மண்ணாகிடுமா?''



சொல்லிக் கொண்டே சமையலறைக்குள் நுழைந்தான். அங்கிருந்து அவனிடம் இருந்து தப்பி ஓடிவிட முடியாதபடி வாயிற்படியருகே நின்று கொண்டு கையை நீட்டிச் சேலைத் தலைப்பை அவன் பற்றியபோது அஞ்சனா நடுநடுங்கிப் போனாள்.

சாதாரணமாக அவள் சிரித்துப் பேசினால் கூட ஆண்கள் அவளை ஏன் தப்பாக எடை போட்டு விடுகிறார்கள்?

சின்ன வயசில் சமையல் ஆள் பிரசாத், பின்னர் கல்லூரி நாட்களில் கௌசிக், குடும்பத் தலைவியாக இருந்தபோது இப்போ இந்தத் தடியன். ஐயோ பாட்டி சொன்னதைக் கேட்காமல் அவங்களை அசட்டை பண்ணி- உதாசீனம் செய்து மாமியாரை விரட்டி விட்டதற்கு எல்லாம் சேர்த்து, ஒட்டு மொத்தமா இந்தத் தண்டனையா? ''என்ன ரொம்ப யோசிக்கிறே! பிகு செய்யாமல் விட்டுக் கொடுத்தா ரெண்டு பெரும் சந்தோஷமா இருக்கலாம் இல்லையா?'' சொல்லி கொண்டு அவள் புடவையை வேகமாக இழுத்து அவளை அணைத்துக் கொள்ளக் கைகளை நீட்டினான்.

வாட்ட சாட்டமான அவனுடன் போராடி ஜெயிப்பது சுலபமான காரியமில்லை என்கிற திகிலில் அவள் வெதறிப் போய்விட்டாள். நெஞ்சு வெடித்துவிடும் போலத் துடியாகத் துடித்தது.

''ரகுநந்தன்... விடுங்கோ. இதென்ன விளையாட்டு? ப்ளீஸ்.'' கெஞ்சினாள்.

''இனிதான் விளையாட்டு ஆரம்பிக்கப் போவுது... விடுவதற்காகவா இத்தனை நாள் இந்த நட்பு நாடகம் நடத்தினேன். லட்டு போல இருக்கிற உன்னை''... மேலே பேசாது மிக அருகிலே நெருங்கினான்.

என்ன செய்வதென்று தெரியாது ஒரு பயங்கரக் குழப்பத்திலே, அது சமயம் கோழைகளுக்கு ஏற்படும் அசாத்தியத்

துணிச்சலிலே, அஞ்சனா அருகில் மேடைமீது கிடந்த தயிர் கடையும் இரும்புக் காம்பு மத்தைச் சட்டென்று கையில் எடுத்துக் கொண்டாள். அவளையும் மீறி எழுந்த வெறியில் ஓங்கி இரண்டு தடவைகள் அவன் முன் நெற்றியில் வேகமாக அடித்தாள். ''போடா வெறி நாயே போ...'' என்று கத்திக்கொண்டு ஓங்கி மேலும் இருமுறை அடித்தபோது, அவன் நெற்றியிலிருந்து திடீரென்று இரத்தம் பீறிக்கொண்டு கொட்டுவதைக் கண்டு பயந்து போய் விட்டாள்.

முகத்தில் கைகளைத் தூக்கி அழுத்திக் கொண்டு ''பாவி! கொன்னுட்டியே...'' என்று அவன் வீரிட்டுக் கத்திய சமயம் அவனைப் பலமாகத் தள்ளிவிட்டு ஒரே பாய்ச்சலில் வாயில் கதவைத் திறந்து கொண்டு தலை தெறிக்க வீதியில் ஓடினாள்.

நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருந்த ஓர் ஆட்டோ ரிக்ஷாவை நிறுத்தி அதனுள் பாய்ந்து ஏறிக்கொண்டு, ''ஓட்டு நுங்கம்பாக்கம் செல்வனார் தெருவுக்கு. அவசரமாகப் போகணும்...'' உத்தரவிட்டாள்.

அழைப்பு மணி ஆத்திரமான ஒலிப்பதைக் கேட்டுப் பங்கஜம் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை வைத்து விட்டு எழுந்து கதவைத் திறந்தவள், அதிர்ந்து போனாள்.

''என்ன அஞ்சனா! என்னம்மா... மேலெல்லாம் ரத்தம்...?''

''முதலில் ஆட்டோவுக்குப் பணம் கொடுத்து அனுப்புங்க சொல்றேன்,'' உள்ளே வந்தவள் சுருண்டு ஒரு சோபாவிலே விழுந்தாள்.

''என்ன ஆச்சு? என்ன இந்த வேலையில் - இப்படி'' என்று பாட்டி பதறியபோது உட்கார்ந்த அஞ்சனா பங்கஜத்தின் கழுத்தைக் கட்டிக் கொண்டு ''பாட்டி - நான் அந்த இரகுநந்தனைக் கொன்னுட்டேன். அவன் மண்டையில் இரத்தம் கொட்டி'' என்று கூறிவிட்டு மேலே பேசமுடியாது மயங்கிப் போனாள்.



அஞ்சனாவைத் தூக்கிப் படுத்த வைத்து விட்டுப் பங்கஜம் உடனடியாக மகனைத் தொலைபேசியில் அழைத்தாள்.

''உன் பார்ட்டி நாசமாகப் போகட்டும். இங்கே வீடே நாசமாகும் நிலை வந்து விட்டது. ஓடிவா...'' அதட்டி அழைத்தாள்.

சிறிது பொழுதில் சேதுராமன் வந்து சேர்ந்தார். அதற்குள் டாக்டரை வரவழைத்துவிட்டிருந்தாள் பங்கஜம்.

வீடு அமர்க்களப்பட்டது. இடையே சேதுராமன் காரில் தன் வக்கீல் நண்பருடன், அஞ்சனா வசித்த வீட்டிற்குச் சென்று பார்த்தபோது கதவு வெளியே சாத்தப்பட்டிருந்தது. ஆனால் இரகுநந்தனைக் காண வில்லை. உள்ளே எல்லா விளக்குகளும் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்ததினாலோ என்னவோ வீடு கொள்ளை போகாது தப்பியது. சமையலறைத் தரை மீதும் சுவரிலும் தெரிந்த இரத்தக் கறையைக் கண்டு கலங்கிப் போனார் அவர்.

ஒரு சமயம் போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்யப் போயிருப்பானோ - என்று அவர் நினைத்ததை -, கூடத் துணைக்கு வந்த குடும்ப வக்கீல் கோதண்டம் தெளிவு படுத்தினார்.

''அப்படியே இருக்க முடியாது. பயல் பயந்து கொண்டு கம்பி நீட்டியிருக்கிறான். அப்படியே அவன் முறையிட்டுக் கொண்டாலும் கேஸ் நடந்தாலும் ஜெயம் நம் பக்கம் தான். ஒரு வீட்டுக்குள் போய் ஓர் ஆண், இரவு வேளையில் ஒரு பெண்ணிடம் அடிபட்டுப் பெருங்காயம் அடைய வேண்டுமானால் குற்றம் அவனுடையதாகத்தானிருக்கும் என்பதை வெட்ட வெளிச்ச மாக்கிவிட முடியும்'' என்று தைரியம் சொன்னார்.

தங்கள் வீட்டுச் சங்கதி அம்பலத்திற்கு வந்துவிடுமோ என்று திகிலில் துவண்டு போனார் அப்பா சேதுராமன்.

விழித்துக் கொண்ட அஞ்சனா அருகில் பாட்டி உட்கார்ந்திருந்தாள். ''உடம்பு இப்போ எப்படியம்மா இருக்கு?''

பரிவுடன் பங்கஜம் கேட்டாள். ''அந்த மனிதன்... அவன்-'' தடுமாறிய அஞ்சனா சிறு குழந்தையைப் போல விம்மி அழுதாள்.

''பாட்டி நான் புரிஞ்சு கொண்டு விட்டேன் , நல்லாவே புரிஞ்சு கொண்டு விட்டேன். ஒரு மனிதன் மிருகமாகிறதுக்குக் காரணம், நாமேதான். நாம் கொடுக்கிற இடம், சந்தர்ப்பம், சூழ்நிலை இதெல்லாம் ஒரு நல்ல மனிதனைக்கூடக் கெட்டவனாக்குகிறது; சரிநிகர் சமானமாக ஆணுடன் பெண் வாழ நினைக்கலாம். ஆனா நீங்க சொன்னபடி பெண் தன் மதிப்பைக் காப்பாத்திக்க, ஒரு எல்லைக்கோடு அமைச்சிக்கணும் என்கிறதை நல்லாவே புரிஞ்சு கொண்டேன் பாட்டி!'' என்று விம்மியபடி பங்கஜத்தின் தோளில் சாய்ந்து கொண்டே, பள்ளிப் பருவத்திலிருந்து அவளுக்கேற்பட்ட அனுபவம் அத்தனையையும் மனம் திறந்து சொன்னாள்.

''பாவிப் பெண்ணே!... இத்தனை காலம் என்கிட்டே மறைச்சு வச்சதனாலே எங்கபோய் நிக்க நேர்ந்தது, பார்த்தியா?'' என்று கோபத்துடன் செல்லமாக, அடிக்க ஓங்கிய பாட்டியின் கையைப் பலமாகப் பற்றிக் கொண்டாள் அஞ்சனா.

''பாட்டி!- அடிக்கக் கூடாது. இப்போ நீங்க என்னை அடிச்சா- உங்க கொள்ளுப் பேரக் குழந்தையையும் சேர்த்து அடிச்சு அழப் பண்ணிடுவீங்க.''

''என்ன சொன்னே? நான் கொள்ளுப் பாட்டியாகப் போறேனா? என் ராஜாத்தி- அப்படியே அசையாது படுத்துக்கோ. லேடி டாக்டர் ரஞ்சனாவைக் கூப்பிடறேன். இந்த அதிர்ச்சிகள் உன் குழந்தைக்கு ஆபத்தைக் கொடுக்கக் கூடாது.'' பங்கஜம் எழுந்து வெளியே வந்தாள்.

''சேது! ஓடிவா!'' என்று ஓங்கிக் குரல் கொடுத்தாள். அந்தக் குரலில் மகிழ்ச்சியும் கலவரமும் கலந்து தொனித்தன.



''எக்ஸ்டென்ஷன் கேட்கப்போறேன்னு சொன்னியே... வேண்டாம். பேசாம உரிய காலத்தில் ரிடயர்ட் ஆகிடு, போறும். இனி உனக்கு வேற ஒரு வேலை காத்துண்டு இருக்கு.''

''என்னம்மா'' என்று கேட்டபடி மாடிக்கு ஓடி வந்தார் சேதுராமன்.

''நீ தாத்தாவாகப் போறே. நான் கொள்ளுப்பாட்டியாகப் போகிறேன். திருநெல்வேலிக்குச் சம்பந்திக்கு ஒரு கடிதம் போடு. உடனே புறப்பட்டு வந்து வீட்டைக் கவனிச்சுக்கச் சொல்லு. அஞ்சனாவை இப்போ நாம அனுப்ப முடியாது. புரியுதா! ஏன் முழிக்கிறே? மறுபடியும் அஞ்சனாவைத் தூக்கி வளர்த்தாப்போல, என் கொள்ளுப் பேத்தியையோ, பேரனையோ தூக்கி மடியில் வச்சிண்டு... சேது! என்ன முழிக்கறே? அஞ்சனாவைச் சரியாக வளர்க்க நேரமில்லாம ஆபீசுக்கு ஓடினாப்பல இப்ப நீ செய்ய முடியாது. நாள் முழுவதும் பேரக் குழந்தையைச் சுமக்கப் போற'' உற்சாகத்திலே கத்தினாள்.

''எனக்குப் புரிஞ்சு போச்சு. பெரியவங்க தங்கள் அனுபவத்திலே கண்ட உண்மைகளை எந்தக் கல்லூரியும் சொல்லித் தருவதில்லை. புரிஞ்சு கொண்டேன்,'' அஞ்சனா முணுமுணுத்து விட்டு, வருங்காலக் கற்பனையில், புன்னகையில் மூழ்கிப் போனாள்.